# எதை நோக்கி பார்கின்றீர்கள்?

“கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன் அவர் என் வலதுபாரிசத்தில் இருக்கிறபடியால் நான் அசைக்கப்படுவதில்லை.” என்று தாவீது ராஜா சங்கீதமாக பாடியிருக்கின்றார். இதை நாம் பரிசுத்த வேதாமத்தில், சங்கீதப் புத்தகத்திலே 16ம் அதிகாரத்திலே வாசிக்கலாம். “கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன்” என்று ஒரு விசுவாசியானவன் கூறும் போது, அதன் கருப்பொருள் என்ன? என் கண்கள் எப்போதும் கர்த்தரை நோக்கி பார்கின்றது என்று அது வாயின் வார்த்தையில் மாத்திரமா இருந்தால் போதுமா? அல்லது மனிதர் காணக் கூடிய வெளியான கிரியையிலும் வாயின் வார்த்தையிலும் இருந்தால் சரியாகிவிடுமோ? இல்லை, மனிதர்கள் மற்றய மனிதர்கள் முன்பாக, நல்ல வார்த்தைகளை பேசி, தங்கள் கிரியைகளை சிறப்பானதாக காட்டிக் கொள்கின்றார்கள். சில வேளைகளிலே, விசுவாசிகளும் இதற்கு விதிவிலக்கானவர்கள் அல்ல. மற்றய மனிதர்கள் காணக்கூடாமல், மனிதனுக்குள் மறைந்திருக்கும் மனதின் கண்கள் எப்போதும் கர்த்தரை நோக்கிப் பார்த்து வாஞ்சையாக இருக்க வேண்டும். கர்த்தரை நோக்கிப் பார்பவர்களின் வாழ்க்கையிலே நிந்தைகள், நெருக்கங்கள், வசைச் சொற்கள் மத்தியிலே, “என் ஆத்துமாவே, தேவனையே நோக்கி அமர்ந்திரு நான் நம்புகிறது அவராலே வரும்” காத்திருப்பு காணப்படும். அப்போது, விசுவாசியின் வாயின் வார்த்தைகள் வெளியான பார்வையும் உண்மையுள்ளதாக இருக்கும். அவன் கண்கள், இந்த உலத்திலுள்ள அழிந்து போகின்றவைகளை நோக்கி இச்சியாமல், மேலானவைளை நோக்கி பார்க்கும். “பரலோகத்தில் வாசமாயிருக்கிறவரே, உம்மிடத்திற்கு என் கண்களை ஏறெடுக்கிறேன். இதோ, வேலைக்கார ரின் கண்கள் தங்கள் எஜமான்களின் கையை நோக்கியிருக்குமாப்போலவும், வேலைக்காரியின் கண்கள் தன் எஜமாட்டியின் கையை நோக்கியிருக்குமாப்போலவும், எங்கள் தேவனாகிய கர்த்தர் எங்களுக்கு இரக்கஞ் செய்யும்வரைக்கும், எங்கள் கண்கள் அவரை நோக்கியி ருக்கிறது.” என்று தேவ பக்தன் பாடியிருப்பதை சங்கீதம் 123ம் அதிகாரத்திலே வாசிக்கின்றோம். உங்களுடைய வெளியான பார்வை, உங்கள் மனக் கண்களுடைய பார்வைக்கு ஒத்திருக்கின்றதா? அல்லது வெளிக் கண்கள் ஒன்றையும், மனக்கண்கள் வேறொன்றையும் வாஞ்சிக்கின்றதா? அப்பயானால் உங்கள் மனக்கண்கள் எதை நோக்கியிருக்கின்றது?

**சங்கீதம் 123:1**

**பரலோகத்தில் வாசமாயிருக்கிறவரே, உம்மிடத்திற்கு என் கண்களை ஏறெடுக்கிறேன்.**

**ஜெபம்:** இருதங்களை ஆராய்ந்து மனதின் எண்ணங்களை அறிகின்ற தேவனே, நான் எப்போதும் உம்மை நோக்கி பார்த்து மேலானவைகளை நாட பிரகாசமுள்ள மனக்கண்களை தந்து வழிநடத்தி செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

📖 மாலை வாசகம் – மத்தேயு 6:22

# என் பங்கும் என் சுதந்திரமும் எங்கே?

**சங்கீதம் 16:6**

**நேர்த்தியான இடங்களில் எனக்குப் பங்கு கிடைத்தது; ஆம், சிறப்பான சுதந்தரம் எனக்கு உண்டு.**

தாவீது ராஜா சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாக இருந்தார். ஆனால், அவர் கண்கள் கர்த்தரை நோக்கி பார்த்திருந்தது. அவர் எதை தனது சுதந்திரமும், பாத்திரத்தின் பங்கும் என்று கூறினார். இந்த உலகத்திலே உண்டான ஆஸ்தியும், அந்தஸ்தும் அதிகாரமுமா? இல்லை, அவருடைய இருதயம் அவைகள் இருந்தும், அவைகளை பற்றிக் கொள்ளாமல், கர்த்தரையே பற்றிக் கொண்டிருந்தது. இந்த பூலோகத்தின் செல்வத்தை சேவிக்காமல், கர்த்தரை சேவித்தார். ஆதலால், "கர்த்தர் என் சுதந்தரமும் என் பாத்திரத்தின் பங்கு மானவர் என் சுதந்தரத்தை தேவரீர் காப்பாற்றுகிறீர். நேர்த்தியான இடங்களில் எனக்குப் பங்கு கிடைத்தது. ஆம், சிறப்பான சுதந்தரம் எனக்கு உண்டு. எனக்கு ஆலோசனை தந்த கர்த்தரைத் துதிப்பேன் இராக்காலங்களிலும் என் உள்ளிந்திரியங்கள் என்னை உணர்த்தும். ஆகையால் என் இருதயம் பூரித்தது, என் மகிமை களிகூர்ந்தது என் மாம்சமும் நம்பிக்கையோடே தங்கியிருக்கும். என் ஆத்துமாவைப் பாதாளத்தில் விடீர் உம்முடைய பரிசுத்தவானை அழிவைக் காணவொட்டீர். ஜீவமார்க்கத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர் உம்முடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலது பாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு." என்று பாடியிருக்கின்றார். நித்திய மேன்மைகாக வேறு பிரிக்கப்பட்ட சகோதர சகோதரிகளே, உங்கள் நேர்த்தியான பங்கு என்ன? உங்கள் சுதந்திரம் எங்கே இருக்கின்றது? உலகத்திலிருந்து வேறு பிரிக்கப்பட்ட பின்பு, உலகத்தோடு மறுபடியும் ஐக்கியமாக இருக்கும்படிக்கு ஒரு விசுவாசி செல்வானாக இருந்தால், அவன் கண்கள் எதை நோக்கி இருக்கின்றது? அவன் மனக் கண்களில் வீசிய திவ்விய ஒளி இப்போது எங்கே? அவன் மனக்கண்கள் இருளடையந்து போனால், அவன் பார்வை எங்கே பதிந்திரு க்கும்? இருளின் அதிகாரத்திற்குரியவைகளின் மேல் பதிந்திருக்கும் அல்லவா? அவன் தான், பரலோக தேவனை சேவிக்கின்றேன் என்று கூறிக் கொள்ளலாம், பரலோக தேவன் என்னை ஆசீர்வதித்திருக்கின்றார் என்று உலக்தின் பங்கை சுதந்திரமாக்கி கொள்ளலாம். ஆனால், அவன் சுத்த மனசாட்சி உணர்வற்றுப்போனதால் அவன் மனக்கண்களில் இருந்து வெளிச்சம் இப்போது இருளாக மாறிவிட்டது. அதனால், அவன் அழிவுக்குரியவைகளை தன் பங்காக்கி கொண்டாலும், அவைகளைக் குறித்து அவன் மேன்மைபாராட்டிக் கொள்கின்றான். உங்கள் பங்கும், சுதங்திரமும் எங்கே என்பதை குறித்து கவனமுள்ளவரர்களாக இருங்கள்.

**ஜெபம்:** என் சுதந்தரமும் என் பாத்திரத்தின் பங்குமான தேவனாகிய கர்த்தாவே, அதன் மேன்மையை நான் உப்போதும் உணர்ந்துவனாக வாழும்படிக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# மனக்கண்கள்

தேவ சாயலாகவும், அவருடைய ரூபமாகவும் சிருஷ்டிக்கப்பட்ட ஆதிப் பெற்றோராகிய ஆதாம் ஏவாள், தேவ மகிமையுடையவர்களாக வாழ்ந்து வந்தார்கள். திவ்விய ஒளியானது அவர்கள் உள்ளத்திலே இருந்தது. தேவனாகிய கர்த்தர் அவர்கள் மத்தியிலே உலாவி வந்தார். ஆனால், ஸ்திரியானவள், தேவ வார்த்தையில் நிலைத்திருக்காமல், பிசாசானவனோடு உரையாடும்படி தன் மனதை சாய்த்த போது, அவள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு கொண்டாள். அதாவது, அவளுடைய மனக்கண்களின் பார்வையானது தேவன் கூறிய வார்த்தைக்கு விரோதமாக இருந்தது. தேவன் செய்யாதே என்று கூறிய காரியமானது அவளுக்கு நன்மையான தோன்றிற்று. அவள் கண்கள் விலக்கப்பட்ட மரத்தின் கனியைப் பார்த்து இச்சித்தது. மனக்கண்கள் இருளடை ந்ததால், அழிவுக்குரியவைகள் அவள் கண்களுக்கு தேவ வார்த்தை யைவிட மேன்மையாக காணப்பட்டது. அவள் விலக்கப்பட்ட மரத்தின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள் அவனும் புசித்தான். சோதோம் கோமோரா அழிக்கப்பட முன்பதாக, தேவ தூதர்கள், லோத்தை நோக்கி: உன் ஜீவன் தப்ப ஓடிப்போ, பின்னிட்டுப் பாராதே. இந்தச் சமபூமியில் எங்கும் நில்லாதே் நீ அழியாதபடிக்கு மலைக்கு ஓடிப்போ என்றார். அப்பொழுது கர்த்தர் சோதோமின்மேலும் கொமோராவின்மேலும், கர்த்தராலே வானத்திலிருந்து கந்தகத்தையும் அக்கினியையும் வருஷிக்கப்பண்ணி, அந்தப் பட்டணங்களையும், அந்தச் சமபூமியனைத்தையும், அந்தப் பட்டணங்களின் எல்லாக் குடிகளையும், பூமியின் பயிரையும் அழித்துப்போட்டார். அவன் மனைவியோ பின்னிட்டுப் பார்த்து, உப்புத்தூண் ஆனாள். பிரியமானவர்களே, லோத்தின் மனைவியின் வெளியான கண்கள் பூமிக்குரியவைகளை இச்சிசத்ததோ அல்லது அவன் மனம் அதை நோக்கிப் பார்த்ததோ? அழிவுக்குரியவைகளை இச்சித்ததால், ஆதாம் ஏவாளின் மனக்கண்களும், லோத்தின் மனைவியின் மனக்கண்களும், தேவ வார்த்தைக்கு கீழ்படியாதபடிக்கு இருளடைந்திருந்து

**1 யோவான் 2:16**

**ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமை யுமாகிய உலகத்திலுள்ளவை களெல்லாம் பிதாவினாலுண் டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள்.**

**ஜெபம்**: சுத்தமன சாட்சியை எனக்கு தந்த தேவனே, உம்முடைய வார்த்தையின் வெளிச்சத்திலே நான் எப்போதும் என் வாழ்வை ஆராய்ந்து அறிந்து, உம்;மையே பற்றிக் கொள்ள எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# இருளான கண்களும் எஜமான்களும்

இந்த வருடத்தின் ஆரம்பத்திலிருந்து, ஆண்வராகிய இயேசுவின் மலைப் பிரசங்கத்தை குறித்து ஆராய்ந்து தியானித்து வருகின்றோம். கடந்த சில நாட்களாக, உலக ஐசுவரியத்தையும், பரலோக பொக்கி ஷங்களையும் குறித்து கர்த்தர் குறித்து வார்த்தைகளை தியானித்து வருகின்றோம். இன்றைய நாட்களிலே சில சபைகளிலே இவைகளை குறித்து பேசினால், அங்கத்தவர்கள் குழப்பமடைந்து விடுவார்கள் என்று சிலர் உலக செழிப்பின் உபதேசத்தை கர்த்தர் கண்டித்து பேசியது போல பேசுவதில்லை. ஒருவனுடைய பார்வை எதின்மேல் இருக்கின்றதென்பதை வைத்து, அவனுடைய மனக்கண்கள் தெளி வாக பார்கின்றதா அல்லது இருள டைந்திருக்கின்தா என்பதை அறி ந்து கொள்ள முடியும். “கண்ணானது சரீரத்தின் விளக்காயிருக்கிறது. உன் கண் தெளிவாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் வெளிச்சமாயிருக்கும். உன் கண் கெட்டதாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் இருளாயிருக்கும் இப்படி உன்னிலுள்ள வெளி ச்சம் இருளாயிருந்தால், அவ்விருள் எவ்வளவு அதிகமாயிருக்கும்!” என்று ஆண்டவராகிய இயேசு கூறியதை மத்தேயு 6ம் அதிகாரம் 22ம் 23ம் வசனங்களில் கூறியிருக்கின்றார். ஒருவனுடைய மனக்கண்கள் இருளடைந்து போனால், அவன் பார்வை முழுவதும் இந்த உலகத்தி ற்குரியவைகளையே நாடித் தேடும். ஆனாலும், அவன் தான் தேவ னையே சேவிக்கின்நேன் என்று கூறிக் கொள்வான். அப்படிப்பட்டவன் மெய் தேவனாகிய கர்த்தரை தன் தேவனாக கொண்டிருளாரமல், இந்த உலகத்தின் பொருளை சேவிக்கின்றவனாக இருப்பான். “இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய ஒருவனாலும் கூடாது ஒருவனைப் பகைத்து மற்றவனைச் சிநேகிப்பான் அல்லது ஒருவனைப் பற்றிக் கொண்டு, மற்றவனை அசட்டைபண்ணுவான் தேவனுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது.” என்று ஆண்ட வராகிய இயேசு தெளிவாகவும், யாவரும் எளிதாக விளங்கிக் கொள்ள கூடிய விதத்திலும் கூறியிருக்கின்றார். எனவே, ஒருவேளை ஐசுவரியம் விரித்தியானால், உங்கள் இருதயத்தை அதின்மேல் பதிய வைக்காக தபடிக்கு, உங்கள் மனக் கண்கள் தெளியவாக பார்க்கும்படி, ஜீவ ஒளி உங்களுக்குள் பிரகாசிக்கட்டும். எந்நிலையிலும் பரலோகத்திலே எப்படிபொக்கிஷங்களை சேர்த்து வைக்கலாம் என்பதையே நாடித் தேடி அவைகளையே மனதார நடப்பியுங்கள்.

**மத்தேயு 6:24**

இரண்டு எஜமான்களுக்கு ஊழி யம் செய்ய ஒருவனாலும் கூடாது;

**ஜெபம்:** அன்பின் பரலோக தேவனே, செல்வப் பெருக்கினால் உம் வார்த் தை நான் மறந்து அதின்மேல் என் கண்களை பதியவைக்காத படிக்கு, எப் போதும் உம்மைய என் முன் நிறுத்தி வைக்க எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

வெள்ளி | செப்டெம்பர் 5

📖 மாலை வாசகம் – 2 தெச 3:10

# உலக பொருளுக்கு அடிமையாகாதிருங்கள்

இந்த உலகத்திலே வறியர்களாக வாழ்ந்து கடந்து செல்லும் மனிதர்கள், செல்வந்தர்களைப்போல, பூவுலகிலே பொக்கிஷங்களை சேர்த்து வைப் பதைக் குறித்த கணக்கு கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்படாது. அதனால், வறியர்கள் யாவரும் இந்த உலகிலே வாழ்ந்த நாட்களிலே உலக பொருளை சேவிக்கவில்லை என்று எவரும் கூறிவிடமுடியாது. இருதயங்களை ஆராய்ந்தறிகின்ற தேவனாகிய கர்த்தர்தாமே மனிதர் களுடைய சிந்தையை அறிந்திருக் கின்றார். உலகத்திலே உயிர்வாழ் வதற்கு தேவையானவைகளை குறித்து கவலையடைய வேண் டாம் என்று ஆண்டவர் இயேசு மலைப் பிரசங்கித்திலே கூறியிருக்கின்றார். அதனால், எல்லோரும் தங்கள் வேலையை விட்டுவிட்டு வீட்டிலே சும்மா இருக்கும்படி கூற வில்லை. தேவன் எலியாவை போஷித்தது போல, எப்போதும் இயற் கைக்கு அப்பாற்பட்ட முறையில் தேவன் ஆகாரம் தருவார் என்று காத் திருப்பது பொருளல்ல. தங்கள் குடும்பங்களின் தேவைகளை சந்திக்க அவர்களுக்கு உதவும்படி பணம் சம்பாதிப்பது தவறு என்றும் அவர் சொல்லவில்லை. அவனவன் தேவை யின்படி திட்டமிட்டு, ஞானமாக சேமிப்பது தவறு என்று பிரசங்கித்ததுமில்லை. “சோம்பேறியே, நீ எறு ம்பினிடத்தில் போய், அதின் வழிகளைப் பார்த்து, ஞானத்தைக் கற்றுக் கொள். அதற்குப் பிரபுவும், தலைவனும், அதிகாரியும் இல்லாதிருந்தும், கோடைகாலத்தில் தனக்கு ஆகாரத்தைச் சம்பாதித்து, அறுப்புக்கா லத்தில் தனக்குத் தானியத்தைச் சேர்த்துவைக்கும். சோம்பேறியே, நீ எவ்வளவுநேரம் படுத்திருப்பாய்? எப்பொழுது உன் தூக்கத்தைவிட்டு எழுந்திருப்பாய்? இன்னுங் கொஞ்சம் தூங்கட்டும், இன்னுங் கொஞ்சம் உறங்கட்டும், இன்னுங் கொஞ்சம் கைமுடக்கிக்கொண்டு நித்திரை செய்யட்டும் என்பாயோ? உன் தரித்திரம் வழிப்போக்கனைப்போலவும், உன் வறுமை ஆயுதமணிந்தவனைப்போலவும் வரும்.” என்று நீதிமொழி களின் புத்தகத்திலே வாசிக்கின்றோம். எனவே தேவனுடையவர்கள், வேலை செய்யாமல், வீண் அலுவற்காகராக இருக்கக்கூடாது என்று வேதம் தெளிவாக கூறுகின்றது. தம்முடையவர்கள் எந்த சூழ்நிலை களிலும் இந்த உலக பொருளை தங்கி வாழாமல், பரம பிதா நம்மை பிழைப்பூட்டுகின்றார் என்று உணர்ந்து, எல்லா காலங்களிலும் அவரை நம்பி வாழ்பவர்களாக காணப்பட வேண்டும். கர்த்தர் என் மேய்பராக இருப்பதால் நான் குறைபடுவதில்லை என்ற மனநிலையோடு அவரைப் பின்பற்றி செல்வோமாக.

**சங்கீதம் 23:1**

**கர்த்தர் என் மேய்ப்பராயிரு க்கிறார்; நான் தாழ்ச்சியடை யேன்.**

**ஜெபம்:** என் தேவைகளை அறிந்த என் பரலோக தந்தையே, உம்முடைய வாழ்வு தரும் வார்த்தையை நன்கு புரிந்து கொண்டு, எல்லா சூழ்நிலைகளிலும் உம்மை நம்பி உம் வழியிலே நடக்க எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# உலகத்தினால் உண்டாகும் அழுத்தம்

மலைப்பிரசங்கத்தின் ஆரம்பத்திலிருந்தே, தானதர்மம், ஜெபம், உபவாசம் போன்ற நன்மையான காரியங்களைக் குறித்து பேசும் போதும், விவாகரத்து, கொலை, விபசாரம், போன்ற தகாத காரியங்களை குறித்து பேசும் போதும், வெளிரங்கமான கிரியைகளைவிட, மனிதர்களுடைய மனதிலே மறைந்திருக்கும் எண்ணங்களை குறித்து சுட்டிக் காட்டியத்தை நாம் தியானித்து வந்தோம். அதுபோலவே, உலகத்திலே வாழ்வதற்கு தேவையான காரியங்களை குறித்து கவலையடைய வேண்டாம் என்று கூறும் போது, தேவைகளை குறித்து கவனமற்று இருக்கும்படியாக கூறாமல், தேவைகளினால் மனம் பதறி, அவைகளைக் குறித்தே தியானமுள்ளவ்ரகளாக இருந்து, அவைகளுக்காகவே வாழ்கின்றோம் என்ற எண்ணம் தம்முடையவர்கின் மனங்களை ஆண்டு கொள்ளாக் கூடாது என்பதை விளக்கின் கூறியிருக்கின்றார். உலகத்திலே பிறந்தால், குறித்த வயதிலே பாடசாலைக் செல்ல வேண்டும், படிப்பிலே சிறந்து விளங்க வேண்டும், பிரபல்யதான பல்கலைக்கழகங்கிலே படிக்கும் படி, விளையாட்டு துறைகளிலும், இன்று பற்பல திறமைகளை வளர்க்க வேண்டும். படித்து பட்டம் பெற்ற பின்பு, தாமதமின்று வேலை நல்ல உத்தியோகங்களிலே அமர வேண்டும். இருப்பதற்கு நல்ல வீடு ஒன்றை வாங்ங வேண்டும். உல்லாசப் பயணங்கள் செல்ல வேண்டும். எதிர்காலத்திற்காக பொருட்களை சேர்த்து வைக்க வேண்டும். பருவத்திலே திருமணம் செய்ய வேண்டும். மறுபடியும் இந்த வாழ்க்கை வட்டத்தை திரும்பவும் ஆரம்பிக்க வேண்டும் என்று மனிதர்கள் சந்ததி சந்ததியாக பிரயாசப்படுகின்றார்கள். இவை யாவற்றையும் நடப்பிப்பதற்கு பணம் முக்கியமானதொன்றாகி விடுகின்றது. அப்படியாக உலகத்தினால் உண்டாகும் பழுவினால், வாழ்வின் உன்னத நோக்கத்தை மறந்து, பிறந்தோம், வாழ்ந்தோம், அனுபவித்தோம், போனாம் என்பதே வாழ்வின் கருப்பொருளை என்று எண்ணிவிடுகின்றார்கள். இப்படியாக நோக்கம் இழந்தவர்கள், தங்கள் பரலோக எஜமானனை மறந்து, உலக பொருளை குறித்து கவலையடைந்தவர்களாக மன அழுத்தங்களோடு வாழ்ந்து விடுகின்றார்கள். ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்று உங்கள் ஜீவனுக்காகவும் என்னத்தை உடுப்போம் என்று உங்கள் சரீரத்துக்காகவும் கவலைப் படாதிருங்கள். ஜீவனும், உடையைப்பார்க்கிலும் சரீரமும் விசேஷித்தவைகள் என்று ஆண்டவர் இயேசு கூறியிருக்கின்றார்.

**மத்தேயு 6:27**

**கவலைப்படுகிறதினாலே உங்களில் எவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான்?**

**ஜெபம்**: என்னை பிழைப்பூட்டுகின்ற பரலோக தந்தையே, நான் இந்த உலகத்தின் தேவைகளை குறித்து மனம்பதறி, அவைகளுக்காகவே வாழ்க்கின்றோன் என்று எண்ணாதபடிக்கு என்னை காத்துக் கொன்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# போதகத்தை ஏற்றுக் கொள்ளாத மனம்

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த போதகரொருவர், அந்த ஊரிலே, கர்த்தரை அறிந்தும், ஊதாரித்தனமாக வாழ்ந்து வரும் ஒரு மனிதனொருவனை சந்தித்து, அவனை நோக்கி: மகனே, நீ ஆண்டவர் இயேசு காட்டிய உண்மையின் வழியை அறிந்தும், உனக்கு கிடைத்த அருமையான காலத்தை குடித்து வெறித்து இப்படியாக நீ வீணாக்கி, உன் வாழ்க்கையை பாழாக்கிக் கொள்கின்றாயே என்று கேட்டார்? அதற்கு அவன் மறுமொழியாக: போதகர் ஐயா, ஆண்டவர் இயேசுவோடு சிலுவையில் அறையப்பட்ட நல்ல கள்வனைப் போல, நான் மரிக்கும் தறுவாயில் மனந்திரும்பி விடுவேன் என்றான். இப்படியான மனிதர்களை நீங்களும் உங்கள் வாழ்வில் சந்தித்திருப்பீர்கள். இவர்கள் தாங்கள் போகின்ற வழி தவறானது என்று அறிந்திருக்கின்றார்கள். மனந்திரும்ப வேண்டிய அவசியத்தையும் நன்றாக புரிந்திருக்கின்றார் கள். ஆனாலும், இவர்கள் எப்போதும் தங்கள் ஆசை இச்சைகளை நிறைவேற்றும்படிக்கு சந்தர்ப்ப சூழ்நிலைகளிலிருந்து தப்பிக் கொள்ளும்படிக்கு, வேதத்திலே காணும் சில தனித்துவமான சம்பவங்களை முழுமையான விளங்கிக் கொள்ளாமல், அவைகளை தங்கள் துர்குணத்திற்கு ஏற்றதாக புரட்டிக்கொள்கின்றார்கள். இவர்கள் வேத வார்த்தைகள் நித்திய ஜீவனுக்கென்று கொடுக்கப்பட்டதை மறந்து, விதண்டாவதங்களுக்குரியதாக மாற்றிக் கொள்கின்றார்கள். ஞாயிறு ஆராதனைக்கு தவறால் போ என்று கூறினால், அப்படியானால் “நோய்வாய் பட்டு கட்டில் கிடையாய் கிடக்கின்றவன் பரலோகம் செல்ல மாட்டானோ” என்பார்கள். மதுபான வெறி கொள்ளுதலை பற்றி கூறினால், “வாய்க்குள்ளே போகிறது மனுஷனைத் தீட்டுப்படுத்தாது. வாயிலிருந்து புறப்படுகிறதே மனுஷனைத் தீட்டுப்படுத்தும்” என்றும், திரைப்படங்களை பார்த்து நெறிகெட்டு உலகப்போக்கிற்குள் போய்விடாதே என்று கூறினால், “சினிமா திரைப் படங்களை பார்க்க வேண்டாம்” என்று வேதம் கூறுகின்றதா என்பார்கள். தங்கள் அலங்கோலமான நடை உடைகளை பற்றி யாரும் கூறினால், தேவன் வெளிதோற்றத்தையல்ல, இருதயத்தையே பார்கின்றார் என்பார்கள். பிரியமானவர்களே, இப்படிப்பட்டவர்கள், இணங்காதவர்கள், இடறலடைகின்றவர்களும், இடறலடையப்பண்ணுகின்றவர்களுகமாயிருப்பவர்கள். பரம பிதா நடாத நாற்றுகள் எல்லாம் பிடுங்கப்ப டும் என்று ஆண்டவர் இயேசு கூறியிருகின்றார். எனவே, உங்கள் நாட் களை இப்பபடிப்பட்டவர்களோடு விரயப்படுத்தாமல், போதகத்தை மனத்தாழ்மையோடு ஏற்றுக் கொண்டு, தேவனுக்கு கீழ்படியுங்கள்.

**மத்தேயு 15:13**

என் பரமபிதா நடாத நாற்றெல்லாம் வேரோடே பிடுங்கப்படும்.

**ஜெபம்:** அன்பின் பரலோக தந்தையே, நித்திய ஜீவனுக்கென்று நீர் விளம்பிய வேதத்தின் மகத்துவதை நான் உணர்ந்தவனாக, உம்முடைய வார்த்தைகளின் வழியிலே வாழ எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து வழி நடத்தி செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

திங்கள் | செப்டெம்பர் 8

📖 மாலை வாசகம் – ஏசாயா 45:1 – 6

# நம் நிலைமையை நன்றாய் அறிந்தவர்...

ஒரு தாயானவள் குறிப்பிட்ட அலுவலாக வெளியே செல்ல வேண்டியிருந்ததால், தன் குழந்தையை பராமரிக்கும்படிக்கு வீட்டிலிருந்தவர்களிடம் கூறிவிட்டு சென்றிருந்தால். சொற்ப நேரம் கழித்து, அக் குழந்தையானது அழ ஆரம்பித்துவிட்டது. குழந்தையின் அழுகையை நிறுத்தும்படிக்கு, அக்கிருந்தவர்கள் பற்பல காரியங்களை செய்தார்கள். குழந்தையின் கவனத்தை மாற்றுவற்கு, குழந்தைக்கு பல விளையாட்டுப் பொருட்களை கொடுத்தார்கள். ஆனால், குழந்தையோ, இன்னும் அதிகமாக அழுது கொண்டிருந்தது. மதிய வேளையிலே தாயானவள், வீடு திரும் பியதும், தன் குழந்தையின் அழுகை இன்னதென்று அறிந்து, தன் குழந் தையின் தேவை இன்னதென்று அறிந்து, தன் குழந்தையை ஆற்றித் தேற்றினாள். தன் குழந்தையை அறிந்த தாயானவள், குழந்தையின் அழுகையின் காரணம் இன்தென்று அறிந்திருக்கின்றாள். உலகிலே வாழும் எல்லா மனிதர்களுக்கும் தேவைகள் உண்டு. பேசமுடியாத மழலை தன் தேவையை அழுகையின் வழியாக வெளிக்காட்டுகின்றது. ஆனால், மனிதர்களோ, தங்கள் தேவைகளை குறித்து கவலையடைந்து, அவைகளை சந்திக்கும்படிக்கு அதிகதிகமாக பிரயாசப்படுகி ன்றார்கள். சில வேளைகளிலே அந்த பிரயாசங்களுக்கு ஓய்வில்லாமல் போய்விடுகின்றது. அதனால், மன அழுத்தமடைந்து, அதிருப்தியோடு வாழ்ந்து வருகின்றார்கள். அக் குழந்தையை தேற்றும்படி பலர் முயற்சி செய்தது போலவே, இந்த உலகின் தத்துவங்களும், ஆலோசனைகளும் இருக்கின்றது. அவைகளில் சில மனிதர்களுடைய கவனத்தை அவர்களுடைய தேவைகளிலிருந்து வேறிடத்திற்கு திருப்பி விடுகின்றது. ஆனால், தேவைகளோ சந்திக்கப்படவில்லை. அதை சந்திப்பதற்கு வழியும் தெரிவதில்லை. தேவைகளோடு இன்னும் அதிக பாரத்தை தங்கள் மேல் ஏற்றிவிடுகின்றார்கள். தாயானவள் தன் பிள்ளையை அறிந்திருக்கின்றது போல, நம்முடைய பரம பிதாவும் நம் தேவை இன்னதென்று நன்கு அறிந்திருக்கின்றார். ஒரு வேளை தாயானவள் தன் குழந்தையை மறந்து போனாலும் அவர் மறந்து போவதில்லை. தம்முடைய வார்த்தையின் வழியான நம் தேவை இன்னதென்றும், அதை அடைந்து கொள்ளும் வழி இன்னதென்றும் நமக்கு கற்றுக் கொடுகின்றார். எனவே, அவருடைய வாழ்வு தரும் வார்த்தையை வாசித்து தியானியுங்கள், அத்தோடு விட்டுவிடாமல், தியானித்தவைகளை வாழ்க்கையிலே நடைமுறைப் படுத்துங்கள்.

**1 பேதுரு 5:7**

**அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர் மேல் வைத்துவிடுங்கள்.**

**ஜெபம்:** என் நிலைமையை நன்றாய் அறிந்த தேவனே, மனதின் யோசனைகளின்படி நடவமலும், உலக ஆலோசனைகளை பற்றிக் கொள்ளாமலும், உம் வார்த்தையில் நிலைத்திருக்க எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# உன்னதமானவைகளின் உறுதிப்பாடு

இந்த பூமியிலுள்ள செல்வம் அனைத்தையும் விற்றாலும் வாங்க முடி யாது. எந்த கல்வி தகமையினாலும் அடைந்து கொள்ள முடியாது. பிரபுக்கள், மேன்மக்கள் என்ற அளப்பெரிய உலக அந்தஸ்துக்கள் இருந்தாலும் பெற்றுக் கொள்ள முடியாதது. ஆண்டுகளாக தவமிருந்து, உடலை வருத்தி, ஆசைகளை ஒறுத்தாலும் அடைந்து கொள்ள முடியா தது. தன்னையே தான் தியாகமாக கொடுத்தாலும், தனக்குண்டான எல்லாவற்றையும் தானதர்மம் செய் தாலும் சம்பாதிக்க முடியாதது. அப் படிப்பட்ட பரலோகத்தின் வாசலை, பிதாவாகிய தேவன் தாமே திறந் தார். உயர்ந்தவன், தாழ்ந்தவன், ஏழை பணக்காரம், கற்றவன் கல்லா தவன் என்ற எந்த பாகுபாடுமி ல்லாமல், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவசிக்கின்றவர்களு க்கு, பணமுமின்றி விலையுமின்று அழிவில்லாத வாழ்வை பெற்று, பரலோக வாசியாகும்படி சிலாக்கயத்தை உறுதிப்படுத்தினார். தம்மு டைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் ஆண்டவர் இயேசுவை நமக்காக ஒப்புக்கொடுத்தார். மீட்கப்படும் நாளுக் கென்று முத்திரையாக பரிசுத்த ஆவியானவரை தந்தார். ஆனாலும் விசுவாசிகளாக இருப்பவர்களில் சிலர், அடைய முடியாத இத்தகைய அதி உன்னதமான உறுதிப்பாட்டை விசுவாசித்தின் வழியாக பெற்றி ருக்க, அழிவுள்ளவும், மனிதர்களால் பற்பல வழிகளால் அடைந்து கொள்ள கூடியதுமான இந்த உலக காரியங்களுக்காக கவலையடை ந்து, சோர்ந்து போய்விடுகின்றார்கள். தேவ வார்த்தையின் தியான த்தை தங்கள் இருதயங்களிலிருந்து அகற்றிப் போட்டு, நாளைய தின த்தை குறித்த பயமானது தங்கள் இருதயங்களை ஆண்டு கொள்ள இடங் கொடுப்பதினால், அவர்கள் அற்ப விசுவாசிகளாக மாறிவிடு கின் றார்கள். தங்களுக்கு முன் வைத்திருக்கும் மேன்மையான தேவ ராஜ்ய த்தையும், அந்த ராஜ்யத்திற்குரிய வாழ்க்கை முறைமையும் தள்ளி விட்டு, உலக ராஜ்யத்தையும், உலக ராஜ்யத்தின் நீதியையும் வாஞ்சை யோடு நாடித் தேடுகின்றார்கள். நீங்களோ, கவலையடைந்து, சோர்ந்து இளைப்படைந்து போகாமல், தேவனுடைய ராஜ்யத்தையும் அதன் நீதி யையும் முதன்மைப் படுத்துங்கள். உங்கள் அழைத்தவர் உங்கள் தேவை களை அறிந்திருக்கின்றார். ஏற்ற வேளையிலே அவைகளை உங்களு க்கு கொடுத்து, வழிநடத்தி முடிவிலே மகிமையில் ஏற்றுக் கொள்வார்.

**ரோமர் 2:7**

**சோர்ந்துபோகாமல் நற்கிரியைகளைச் செய்து, மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்தியஜீவனை அளிப்பார்.**

**ஜெபம்:**நித்திய ஜீவனுக்கென்று என்னை வேறு பிரித்த தேவனே, அதி உன்னதமானவைகளை குறித்த உறுதிப்பாட்டை நீர் எனக்கு அழித்தற்காக நன்றி. நான் அதை விட்டுவிலகாதபடிக நாத்துக் கொள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# சொன்னத்தை செய்து முடிக்கும் தேவன்

ஒரு விதவையான தாயானவள் காலதாமதமாகும் தன் கணவரின் ஓய்வூதியத் பணத்தை பெற்றுக் கொள்ளும்படிக்கு அரசாங்க உத்தியோகஸ்தரை சந்திக்கும்படி சில தடவைகள் சென்றிருந்தும், அவரை சந்திக்க முடியாமல் போய்விட்டது. அடுத்த முறை அவள் குறிப்பிட்ட அரசாங்க காரியாலத்திற்கு சென்ற போது, எதேட்சயாக அங்கிருந்த உயர் அதிகாரியொருவரை சந்திக்கும் சிலாக்கியம் அவளுக்கு கிடைத்தது. அந்த அதிகாரியானவர், அவளுடைய நிலைமையை அறிந்த போது, நீ ஒன்றுக்கும் கவலையடைய வேண்டாம். அடுத்த மாதத்திலிருந்து உன் வங்கிக் கணக்குக்கு கணவரின் ஓய்வூதியப் பணம் வைப்பிலிடப்படும் என்று கூறினார். அதை கேட்ட அந்த தாயானவள், மிக்க மகிழ்ச்சியோடு வீடு திரும்பினாள். இரக்கமுள்ள அந்த அதிகாரி அதை செய்து முடிக்க அதிகாரம் உள்ளவர் என்ற நம்பிக்கை அவளிடம் இருந்தது. அவரின் வார்த்தையை கேட்ட பின்பு, அவள் ஓய்வூதியப் பணத்தை குறித்த கவலையடைவதை விட்டுவிட்டாள். மாறிப்போகும் மனிதர்களின் வார்த்தையிலே அவ்வளவு நம்பிக்கை அவளுக்கு இருந்தது. பிரியமான சகோதர சகோதரிகளே, நம்மை அழைத்த, சர்வத்தைம் சிருஷ்டித்த, நம்முடைய பரம பிதாவானவர், சர்வ வல்லமையுள்ளவர். அவர் காலத்தை கடந்தவர். காலங்களை அறிந்தவர். அவர் சொல்ல ஆகும், அவர் கட்டளையிட நிற்கும். தம்முடையவர்களை குறித்து அவர் ஒரு அருமையான திட்டத்தை வைத்திருக்கின்றார். வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் என்று வாக்கு கொடுத்து அழைக்கின்றார். ஆனாலும், விசுவாசிகளோ, சில வேளைகளிலே, தங்கள் வாழ்விலே ஏற்படும், சூழ்நிலைகளை கண்டு, பயந்து, கர்த்தர் தங்களை மறந்தாரோ, கைவிட்டாரோ என்று தங்கள் மனதிலே யோசனை செய்து கொண்டு, அவருடைய வார்த்தையிலே நிலைநிற்காமல், தளர்ந்து போய்விடுகின்றார்கள். அவருடைய வார்த்தை ஜீவனுள்ளது. அவர் தமது வார்த்தையிலே உண்மையுள்ளவர். அவர் நினைத்ததை ஒருவரும் தடுக்க முடியாது. எனவே, நீங்கள் உங்கள் வாழ்க்கை படவில் மோதும் அலைகளை கண்டு கலங்கி போய்விடாதபடிக்கு, உங்கள் அழைத்த ஆண்டவர் இயேசுவின் வார்த்தையிலே நிலைத்திருங்கள். அவர் ஒரு போதும் கைவிட மாட்டார்.

**யோவான் 15:7**

**நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்.**

**ஜெபம்:** தாய் மறந்தாலும் நான் உன்னை மறவேன் என்று வாக்குரைத்த தேவனே, எந்த சூழ்நிலையிலும் உம்முடைய வார்த்தையிலே நான் நிலைத்திருக்கும்படிக்கு எனக்கு பெலன் தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நீங்கள் தேவனுடைய ஜனங்கள்

இந்த உலகத்திலே ஞானிகள் பிள்ளைகளுக்கு கூறும் அறிவுரைகளும், ஆலோசனைகளும் என்ன? அந்த அறிவுரைகளும் ஆலோசனைகளும் முதன்மையாக இந்த உலகத்தின் ராஜ்யத்தை குறித்த இலக்காகவே இருக்கின்றது? அவைகள் கேட்பதற்கு நன்மையானவைகளாக தோன் றலாம். ஆனால், இந்த உலகத்திற்குரியவர்கள் உலகத்திற்குரிய ஆலோ சனைகளை வழங்குகின்றார்கள். அவைகள் இந்த உலகத்தோடு முடிந்து போய்விடும். தாங்கள் அறியாதவை களை அவர்கள் எப்படி அறிவிக்க முடியும். அழியாத ராஜ்யமாகிய பரலோகத்தை குறித்து அவர்கள் பேசுவதில்லை. ஏனெனில் அவர்கள் மனக்கண்கள் குருடாகியிருப்பதால், அவர்கள் தாங்கள் நாடித் தேடுவது எவ்வளவு சீக்கிரமாக அழிந்து போகும் என்பதை அறியாது, அவை களை தங்கள் பொக்கிஷமாக்கிக் கொள்கின்றார்கள். கல்வியை கற்று, வியாபாரத்தை செய்து, பணத்தை பெருக்கி இந்த பூமியிலே பெரும் செல்வந்தர்களாக வாழ வேண்டும் என்று ஒருசாரரும், உங்கள் இருதய த்தின் கனவு என்ன, அதன்படி நீங்கள் வாழுங்கள். நீங்கள் விரும்பிய த்தை பின்தொடர்ந்து பற்றிக் கொள்ளுங்கள் என்ற வேறொரு சாராரும் தங்கள் புத்திக்கெட்டிய ஆலோசனைகளை வழங்குகின்றார்கள். இவர்களில் சிலர், ஏன் நாங்கள் தேவன் விரும்புதை செய்ய வேண்டும் என்று, தேவனுக்கு விரோதமாக தங்கள் குரல்களை எழுப்புகின்றார்கள். தேவனுடைய அன்பையும், மனிதரைக் குறித்த அவருடைய அநாதி தீர்மானத்தை அறிந்து கொள்ள முடியாமல் இவர்கள் இருதயம் இருள டைந்து இருக்கின்றது. அந்த இருளின் அதிகாரி யார்? அவன் கொல்ல வும் அழிக்கவும் வருகின்றானேயன்று வேறொன்றுக்கும் வரான் என்று அறியாமல், அவனுடைய ஆலோசனைகளை தங்கள் வாழ்விலே முதன் மையாக்கிக் கொண்டு, அந்த ஆலோசனைகளே சிறந்தது என்று இளைய தலைமுறைகளுக்கும் கற்றுக் கொடுக்கின்றார்கள். நீங்களோ அந்தகார இருளில் இருந்து ஆச்சரியமான தெய்வீக ஒளிக்கு கொண்டுவரப்பட்டிருக்கின்றீர்கள். எனவே, நாம் மறுபடியும் இனிமை யாக தோன்றும் இந்த உலகத்தில் கிரியை செய்யும் இருளின் அதிகார த்தின் ஆலோசனைகளுக்கு செவி சாய்க்காமல், தேவ ஆலோசனை யின் வழியிலே நடக்கக்கடவோம். தேவ ராஜ்யத்தையே நம் வாழ்வில் முதன்மைப்படுத்தி ஆண்டவர் இயேசுவை பின்பற்றுவோம்.

**1 பேதுரு 2:10**

**முன்னே நீங்கள் தேவனுடைய ஜனங்களாயிருக்கவில்லை, இப்பொழுதோ அவருடைய ஜனங்களாயிருக்கிறீர்கள்;**

**ஜெபம்**: மேன்மையானதை அடையும்படிக்கு என்னை வேறுபிரித்த என் தேவனாகிய கர்த்தாவே, நான் எப்போதும் உம்முடைய திவ்விய ஒளியிலே நடக்க எனக்கு பிரகாசமுள்ள மனக்க கண்களை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

வெள்ளி | செப்டெம்பர் 12

📖 மாலை வாசகம் – மத்தேயு 11:28

# நித்திய ஆறுதல்

துன்பங்கள் துயரங்கள் மனிதர்களுடைய வாழ்க்கை சூழ்ந்து கொள்ளும் போது, அவர்கள் தங்கள் நிலைமையைக் குறித்து கவலையடைந்து சோர்ந்து போவதுண்டு. அப்படிப்பட்ட சூழ்நிலைகளிலே, உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள், ஊரார் கூடி நின்று அவர்களுக்கு ஆதரவு வழங்குகின்றார்கள். ஆறுதலான வார்த்தையை அவர்களுக்கு கூறி, கவலையடைய வேண்டாம் என்று தேற்றுகின்றார்கள். அந்த வார்த்தைகளிலும், ஆதரவுகளிலும் ஆறுதல் உண்டு. ஆனால், காலங்கள் கடந்து செல்லும் போது, அவர்களில் அநேகர் தங்கள் சொந்த நாளாந்த அலுவல்களுக்கு கடந்து சென்று விடுவார்கள். ஒரு சிலர் சில காலங் களுக்கு அவர்களோடு இருப்பார்கள். ஆனாலும், அவர்களின் பெலனும் மட்டுப்படுத்தப்பட்டதாவே இருக்கின்றது. கருப்பொருளாவது, கவலைகள் சூழ்ந்து கொள்ளும் போது, இந்த உலகத்திலிருந்து உண்டாகும் ஆறுதல் நிரந்தரமானது அல்ல. ஒரு சிலர் கடமைக்காக ஆறுதல் கூறிவிட்டு செல்வதுமுண்டு. சில சமயங்களிலே அவை முகஸ்தியாக இருக்கின்றது என்பது வெளிய ரங்கமாகயிருக்கின்றது. ஆனால், நம்முடைய தேவனாகிய கர்த்தரால் நமக்கு உண்டாகும் ஆறுதல் அத்தகையதல்ல. எதர்காலத்தைக் குறித்து கவலையடைய வேண்டாம் என்று வெறும் வார்த்தைகளோடு மனிதர்கள் விட்டுவிடுவது போது, விட்டுவிடுவதற்கு அவர் மனுஷன் அல்ல. அவருடைய வார்த்தைகள் ஜீவனுள்ளவைகள். அதை வாசிக்கின்றவர்களும் தியானிக்கின்றவர்களும் அதனால் திருப்தியாகின்றார்கள். விசுவாசிகள் தங்களை தாழ்த்தி, நருங்குண்டதும், நொருங்குண்டதுமான மனதோடு, அவருடைய சமுகத்திற்கு ஜெபத்திற்கு செல்லும் போது, அவருடைய திவ்விய பிரசன்னத்திலே அவர்களுக்கு ஆறுதல் உண்டாகின்றது. “உம்மிலே பெலன்கொள்ளுகிற மனுஷனும், தங்கள் இருதயங்களில் செவ்வையான வழிகளைக் கொண்டிருக்கிறவர்களும் பாக்கியவான்கள். அழுகையின் பள்ளத்தாக்கை உருவ நடந்து அதை நீரூற்றாக்கிக்கொள்ளுகிறார்கள் மழையும் குளங்களை நிரப்பும். அவர்கள் பலத்தின்மேல் பலம் அடைந்து, சீயோனிலே தேவசந்நிதியில் வந்து காணப்படுவார்கள்.” என்று தேவ பக்தன் சங்கீதமான பாடியிருப்பதை பரிசுத்த வேதாகமத்திலே சங்கீதம் 84ம் அதிகாரத்திலே வாசிக்கலாம்.

**சங்கீதம் 84:6**

**அழுகையின் பள்ளத்தாக்கை உருவ நடந்து அதை நீரூற்றாக்கிக்கொள்ளுகிறார்கள்**

**ஜெபம்:** வார்த்தையை அனுப்பி என்னை குணமாக்கும் தேவனே, ஆறுதல் தரும் உம்முடைய ஜீவ வசனத்தை தியானித்து, அந்த வார்த்தைகளிலே திருப்பியடையும்படி என்னை வழிநடத்தி செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

வெள்ளி | செப்டெம்பர் 13 | 📖 மாலை வாசகம் – 1 கொரி 10:4 –5

# சகலவிதமான ஆறுதலின் தேவன்

ஏன் இப்படி வருத்தமாயிருக்கின்றீர்கள்? ஏன் இப்படி முகம் சோர்வாக இருக்கின்றது? கிறிஸ்தவனென்றால் எப்போதும் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்று சிலர் மற்றவர்களுடைய துக்கத்திலே கூறுவதை கேட்டிருப்பீர்கள். அது சிலரின் தவறான அபிப்பிரயாம். சில வேளை கயிலே, ஒருவன் ஒரு காரியத்தைக் குறித்து கவலையடைந்தால் அவன் பாவம் செய்கின்றான் என்ற பிரகாரமாக பேசிக் கொள்வார்கள். கவலை, துக்கம், சோகம் போன்றவற்றிற்கு விசுவாசிகள் விதிவிலக்கானவர்கள் அல்ல. ஆனால் கிறிஸ்வர்களாகிய நாம் அவைகளினாலே நிலைநிற்காமல், அவைகள் மையமாக வைத்து வாழ்வின் தீர்மானகளையும் எடுத்துக் கொள்ளக் கூடாது. “நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும், உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக. நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனும், இரக்கங்களின் பிதாவும், சகலவிதமான ஆறுதலின் தேவனுமாயிருக்கிறவருக்கு ஸ்தோத்திரம். தேவனால் எங்களுக்கு அருளப்படுகிற ஆறுதலினாலே, எந்த உபத்திரவத்திலாகிலும் அகப்படுகிறவர்களுக்கு நாங்கள் ஆறுதல் செய்யத் திராணியுள்ளவர்களாகும்படி, எங்களுக்கு வரும் சகல உபத்திரவங்களிலேயும் அவரே எங்களுக்கு ஆறுதல் செய்கிறவர். எப்படியெனில், கிறிஸ்துவினுடைய பாடுகள் எங்களிடத்தில் பெருகுகிறதுபோல, கிறிஸ்துவினாலே எங்களுக்கு ஆறுதலும் பெருகுகிறது. ஆதலால், நாங்கள் உபத்திரவப்பட்டாலும் அது உங்கள் ஆறுதலுக்கும் இரட்சிப்புக்கும் ஏதுவாகும் நாங்கள் ஆறுதலடைந்தாலும் அதுவும் உங்கள் ஆறுதலுக்கும் இரட்சிப்புக்கும் ஏதுவாகும் நாங்கள் பாடுபடுகிறதுபோல நீங்களும் பாடுபட்டுச் சகிக்கிறதினாலே அந்த இரட்சிப்பு பலன்செய்கிறது. நீங்கள் எங்களோடேகூடப் பாடுபடுகிறதுபோல, எங்களோடேகூட ஆறுதலும் அடைகிறீர்களென்று நாங்கள் அறிந்து, உங்களைக்குறித்து உறுதியான நம்பிக்கையுள்ளவர் களாயிருக்கிறோம்.” என்று 2 கொரிந்தியர் முதலாம் அதிகார்திலே வாசிக்கின்றோம். நம்முடைய வாழ்க்கையிலும் எங்கள் பிதாவாகிய தேவன் நமக்கு சகலவித ஆறுதலின் தேவனாயிருக்கின்றார். நாம் கவலையடைந்திருக்கும் போது, நம் நிலைமை நன்றாக அறிந்து தூக்கிச் சுமக்கின்ற தேவனாக இருக்கின்றார். எனவே சோர்ந்து போகாமல் அவருடைய வார்த்தையிலே நிலைத்திருங்கள்.

**2 கொரிந்தியர் 1:3**

**இரக்கங்களின் பிதாவும், சகலவிதமான ஆறுதலின் தேவனுமாயிருக்கிறவருக்கு ஸ்தோத்திரம்.**

**ஜெபம்:** சகல வித ஆறுதலின் தேவனே, துன்பங்கள், வியாகுலங்கள், உபத்திரவங்கள் மத்தியிலே நீர் எனக்கு ஒரு நல்ல தந்தையைப் போல ஆதரவாக இருந்து தூக்கி சுமப்பதற்காக நன்றி செலுத்துகின்றேன். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# யார் பாரச் சுமைகளை ஏற்றுகின்றார்கள்?

அக்காலத்திலே தேவ ஜனங்கள் எகிப்திலே அடிமைகளாக இருக்கும் போது, ஆளோட்டிகள் அவர்கள் மேல் பாரச் சுமைகளை ஏற்றினார்கள். அதனால், அவர்களுக்கு அவர்கள் ஜீவனையும் கசப்பாக்கினார்கள். அவர்கள் அந்தப் பாரச் சுமையை தங்கள் மேல் ஏற்றிக் கொள்ளவில்லை. சில மனிதர்கள் தங்கள் நாளாந்த பாடுகளை குறித்து கவலையடைகின்றார்கள். என்னத்தை தங்கள் பிள்ளைகளுக்கு உண்ணக் கொடுப்போம்? பாடசாலைக்கு செல்ல எப்படி காலணிகளை வாங்கிக் கொடுப்போம்? மழைகாலம் நெருங்குகின்றது, கூரையை பழுது பார்க்க வேண்டும், பணத்திற்கு எங்கே செல்வோம் என்று தங்கள் அடிப்படைத் தேவைகளை குறித்து கவலையடைகின்றார்கள். நம்முடைய ஆண்டவராகிய இயேசு இவைகளைக் குறித்து கவலையடைய வேண்டாம் என்று கூறி, தம்மைப் பின்பற்றுகின்றவர்களை தேற்றினார். ஆனால், இன்னும் சில மனிதர்கள், அந்த மனிதனிடம் இருக்கும் கார் விலையுயர்ந்து என்னிடம் அப்படியில்லை, எனவே நான் இன்னுமொரு வேலை செய்து சம்பாதிக்க வேண்டும். என் நண்பன் உல்லாசப் பயணம் செல்கின்றான், அது போல நானும் செல்ல வேண்டாம். விதம் விதமாக சமைத்து உண்ண வேண்டும். பணத்திற்கு எங்கே போவோம்? என்று இந்த உலகத்தின் காரியங்களை குறித்து கவலையடைகின்றார்கள். இந்த கவலையானது, அவர்கள் மனதிலிருக்கும் ஆசை இச்சைகளால் உண்டாகின்றது. சில வேளைகளிலே விசுவாசக் குடும்பங்களும் இப்படிப்பட்ட நிலைமைக்கு உந்தப்படுகின்றார்கள். காலப்போக்கிலே, அழைப்பின் நோக்கத்தை மறந்து, செழிப்பை நோக்கமாக்கிக் கொள்கின்றார்கள். உலக செழிப்பையும், களியாட்டத்தையும், தேவ உபதேசமாகவும் மறாறிவிடுகின்றார்கள். நீங்களோ இவைகளை குறித்து கவலையடையாமல் கர்த்தரை நோக்கிப் பாருங்கள். உங்கள் இருதயங்கள் பெருந்திண்டியினாலும் வெறியினாலும் லவுகீக கவலைகளினாலும் பாரமடையாதபடிக்கும், நீங்கள் நினையாத நேரத்தில் அந்த நாள் உங்கள்மேல் வராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள் என்று ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். எனவே, நீங்களே உங்கள் மேல் சுமைகளை ஏற்றுக் கொள்ளாமல், "பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கிநிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்".

**லூக்கா 21:34**

**நீங்கள் நினையாத நேரத்தில் அந்த நாள் உங்கள் மேல் வராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள்.**

**ஜெபம்:** நித்திய ஜீவனுக்கென்று என்னை அழைத்த தேவனே, இந்த உலகத்தின் கவலைகளினால் என் இருதயம் சோர்ந்து போய்விடாதபடிக்கு, உம்; வார்த்தையிலே நிலைத்திருக்க எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நான் பயப்படும் நாளிலே!

தேவ பக்தனாகிய தாவீது ராஜா, தன் வாழ்க்கையிலே பல தடவைகள் மிகவும் நெருக்கப்பட்டார். அவருடைய ஆத்துமா சில வேளையிலே கலங்கிப்போயிற்று. தேவன் என்னை மறந்தாரோ என்று கூறு எண்ணும் அளவிற்கு அவருடைய கவலை பெருகியிருந்துது. அந்த வேளையிலே அவர் சங்கீதமாக படியது என்னவென்றால்: தேவனே, எனக்கு இரங்கும் மனுஷன் என்னை விழுங்கப்பார்க்கிறான், நாள்தோறும் போர்செய்து, என்னை ஒடுக்குகிறான். என் சத்துருக்கள் நாள்தோறும் என்னை விழுங்கப்பார்க்கிறார்கள் உன்னதமானவரே, எனக்கு விரோதமாய் அகங்கரித்துப் போர்செய்கிறவர்கள் அநேகர். நான் பயப்படுகிற நாளில் உம்மை நம்புவேன். தேவனை முன்னிட்டு அவருடைய வார்த்தையைப் புகழுவேன் தேவனை நம்பியிருக்கிறேன், நான் பயப்படேன் மாம்சமானவன் எனக்கு என்ன செய்வான்? நித்தமும் என் வார்த்தைகளைப் புரட்டுகிறார்கள் எனக்குத் தீங்குசெய்வதே அவர்கள் முழு எண்ணமாயிருக்கிறது. அவர்கள் ஏகமாய்க் கூடி, பதிவிருக்கிறார்கள் என் பிராணனை வாங்க விரும்பி, என் காலடிகளைத் தொடர்ந்து வருகிறார்கள். அவர்கள் தங்கள் அக்கிரமத்தினால் தப்புவார்களோ? தேவனே, கோபங்கொண்டு ஜனங்களைக் கீழே தள்ளும். என் அலைச்சல்களை தேவரீர் எண்ணியிருக்கிறீர் என் கண்ணீரை உம்முடைய துருத்தியில் வையும் அவைகள் உம்முடைய கணக்கில் அல்லவோ இருக்கிறது? நான் உம்மை நோக்கிக் கூப்பிடும் நாளில் என் சத்துருக்கள் பின்னிட்டுத் திரும்புவார்கள் தேவன் என் பட்சத்தில் இருக்கிறார் என்பதை அறிவேன். தேவனை முன்னிட்டு அவருடைய வார்த்தையைப் புகழுவேன் கர்த்தரை முன்னிட்டு அவருடைய வார்த்தையைப் புகழுவேன். தேவனை நம்பியிருக்கிறேன், நான் பயப்படேன் மனுஷன் எனக்கு என்ன செய்வான்?" என்று தன் துயரத்திலே தேவனை நோக்கிப் பார்த்தார். தேவனை அவரை எல்லா கண்ணிகளுக்கும் நீங்கலாக்கி விடுவித்தார். உங்கள் வாழ்விலும், நீங்கள் நெருக்கப்பட்டு, துயரப்படும் போது, கர்த்தர் மறந்தாரோ? நான் பாவம் செய்து தள்ளுண்டு போனேனோ என்று கலங்கி தவிக்காமல், தேவனாகிய கர்த்தர் நோக்கிப் பாருங்கள். அவருடைய நேரத்திற்காக காத்திருங்கள். விசுவாசத்திலே நிலைத்திருங்கள். அறிகையிலே உறுதியாய் இருங்கள். குறித்த காலத்திலே அவர் உங்கள் அநேகர் முன் சாட்சியாக நிறுத்துவார். வாக்குரைத்த தேவன் உண்மையுள்ளவர்.

**சங்கீதம் 56:8**

**என் கண்ணீரை உம்முடைய துருத்தியில் வையும்; அவைகள் உம்முடைய கணக்கில் அல்லவோ இருக்கிறது?**

**ஜெபம்**: எனக்காக யாவையும் செய்து முடிக்கப்போகிற தேவனாகிய உன்னதமான தேவனே, நெருக்கப்படுகின்ற நாளிலே நான் பதறி உம்மைவிட்டு சிதறுண்டு போகாதபடிக்கு என்கை காத்துக் கொள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

செவ்வாய் | செப்டெம்பர் 16 | 📖 மாலை வாசகம் – 1 தெச 5:16–18

# எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்

கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள் சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன் எனறு பிலிப்பியர் நாலாம் அதிகாரம், நாலாம் வசனத்திலே வாசிக்கின்றோம். இதன் கருப்பொருள் என்ன? விசுவாசிகள் மனதிலே கவலைகள் இருந்தாலும் எப்போதும் சிரித்து, கவலை என்று காண்பிக்காமல், சந்தோஷமாக இருக்கின்றேன் என்று காண்பிப்பதா? அப்படியானால், உள்ள ஒரு வேஷமும் வெளியே ஒரு வேஷமுமாயிருக்குமே. ஒவ்வொரு விசுவாசியின் வாழ்க்கையில், அவர்கள் குடும்பத்தில், உறவினர், நண்பர்கள், சக வேலையாட்கள் மத்தியிலே கருத்து முரண்பாடுகள் ஏற்படும். இதற்கு விதிவிலக்கானவர்கள்இல்லை. சில வேளைகளிலே கடினமான சூழ்நிலைகளுக்குள் தள்ளப்படலாம். சவால்கள் ஒன்றின்பின் ஒன்றாக வரலாம். கிறிஸ்துவுக்குள் ஏக சிந்தையில்லாமல், வேறு சிந்தையுள்ளவர்களாக தர்கங்களை பிறப்பிக்கலாம். இதனால், மனதிலே கோபம், வன்மம், பகை, ஏமாற்றம் போன்ற கசப்பான எண்ணங்கள் உண்டாகி, மனக் கவலையுள்ளவர்களாக மாறிவிடுகின்றார்கள். வாதுகள், வன்மங்கள், தர்க்கங்கள், கருத்து முரண்பாடுகள் மத்திலே கிறிஸ்துவினுடையவர்கள், தங்கள் முதிர்ச்சியை காண்பிக்க வேண்டும். ஆவியின் கனியாகிய சாந்த குணம் வெளிப்பட வேண்டும். அதனால் மனதிலே கவலை இல்லை என்று பொருளல்ல. "நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல்,எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங் களை ஸ்தோத்திரத்தோடேகூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்." இப்படியாக கிறிஸ்துவிலே தங்கி வாழும் வாழ்க்கையிலே விசுவாசிகள் நாளுக்குள் நாள் வளர்ந்து பெருக வேண்டும். நம் மனக்கவலைகளையும், கிலேசங்களையும், தேவனுக்கு தெரியப்படுத்த வேண்டும். நம்மை தேற்றும் ஆவியானவர் நமக்குள்ள இருந்து கிரியையை நடப்பிக்க நாம் இடம் கொடுக்க வேண்டும். கர்த்தர் எல்லாவற்றையும் அறிந்தவர். யாவும் அவருடைய கட்டுப்பாட்டிற்குள் இருக்கின்றது என்ற அறிக்கையானது நடைமுறையிலே வெளிப்பட வேண்டும். "அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்." அப்பொழுது எல்லா சூழ்நிலைகளிலும் கர்த்தருக்குள் சந்தோஷமாக இருக்க முடியும்.

**பிலிப்பியர் 4:7**

**அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்.**

**ஜெபம்**: எல்லாவற்றிலும் எல்லாமுமாக இருக்கும் சர்வ வல்லமையுள்ள தேவனே, இந்த உலகிலே பதறாமல் உம் வார்த்தையிலே நிலைத்திருந்து நிதானமாக வாழ எனக்கு கற்றுத் தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

📖 மாலை வாசகம் – யோவான் 16:33

# ஜீவனுள்ள தேவன் உங்களோடிருக்கின்றார்

கர்த்தர் உயிர்தெழுந்த அன்றையத்தினமே சீஷர்களில் இரண்டுபேர் எருசலேமுக்கு ஏழு அல்லது எட்டு மைல் தூரமான எம்மாவு என்னும் கிராமத்துக்குப் போனார்கள். போகையில் கர்த்தர் சிலுவையிலே அறை யப்படத்தையும், பின்னர் அவர் உயிர்தெழுந்தார் என்று சில ஸ்திரிகள் கூறியதையும் குறித்து ஒருவரோடொருவர் பேசிக்கொண்டார்கள். இப் படி அவர்கள் பேசி, சம்பாஷித்துக்கொண்டிருக்கையில், இயேசு தாமே சேர்ந்து அவர்களுடனேகூட நடந்துபோனார். ஆனாலும் அவரை அறியாதபடிக்கு அவர்களுடைய கண்கள் மறைக்கப்பட்டிருந்தது. அப்பொழுது உயிர்தெழுந்த கர்த்தராகிய இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் துக்கமுகமுள்ளவர்களாய் வழிநடந்து, ஒருவருக்கொருவர் சொல்லிக்கொள்ளுகிற காரியங்கள் என்னவென்று கேட்டார். அவர்களில் ஒருவனாகிய கிலெயோப்பா என் பவன் பிரதியுத்தரமாக: இந்நாட்களில் எருசலேமிலே நடந்தவைகளை அறியாதபடிக்கு நீர் அந்நியராயிருக்கிறீரோ என்றான். அவர்: எவைகள் என்றார். அதற்கு அவர்கள்: நசரேயனாகிய இயேசுவைக் குறித்தவைகளே. அவர் தேவனுக்கு முன்பாகவும் ஜனங்களெல்லாருக்கு முன்பாகவும் செய்கையிலும் வாக்கிலும் வல்லமையுள்ள தீர்க்கதரிசியாயிருந்தார். நம்முடைய பிரதான ஆசாரியரும் அதிகாரிகளும் அவரை மரண ஆக்கினைக்குட்படுத்தி, சிலுவையில் அறைந்தார்கள். அவரே இஸ்ரவேலை மீட்டிரட்சிப்பவர் என்று நாங்கள் நம்பியிருந்தோம். இவைகள் சம்பவித்து இன்று மூன்று நாளாகிறது என்று நடந்து முடிந்த சம்பவங்களைக் ஒழுங்காக கூறினார்கள். ஆனாலும், கர்த்தர் உயிர்ந்தெழுந்தார். அவர் ஜீவிக்கின்றார். அவர் தங்களோடு நடந்து வருகின்றார் என்பதை உணராதிருந்தார்கள். வேத வார்த்தைகளை தியானித்து, விசுவாசிக்கிறதற்குப் புத்தியில்லாத மந்த இருதயம் இருந்ததால், அவர்கள் துக்க முகத்தோடு காணப்பட்டார்கள். கர்த்தர் அவர்களோடு இருந்தது போல நம்மோடும் இருக்கின்றார். அவர் யாவற்றையும் அறிந்திருக்கின்றார். அவர் ஒருபோதும் கைவிட மாட்டார். எனவே, கலங்காமல், திடன் கொள்ளுங்கள். ஜீவ வார்த்தைகளை தியானியுங்கள். பரிசுத்த ஆவியானவருக்கு இடங் கொடுங்கள். உங்களை அழைத்தவர் உண்மையுள்ளவர்

**எபிரெயர் 13:5**

**நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே.**

**ஜெபம்**: பரலோக தேவனே, உமது காரியங்களை அறியாமல், என் வாழ்வின் சூழ்நிலைகளால் துக்கம் நிறைந்தவனாய் வாழாமல், உம்முடைய வசத்தை தியானித்து, அதன் வெளிச்சத்திலே வாழ கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# மனப் புண்களை ஆற்றுகின்றவர்

எங்களுடைய நிலைமை உங்களுக்கு புரியாது. நாங்கள் போகின்ற பாடுகள் உங்களுக்கு வெகு தூரம் என்று மனிதர்கள் சொல்ல கேட்டிருப்பீர்கள். மனிதர்கள் எப்போதும், மற்றவர்களுடைய வெளியரங்கமான காரியங்களை பார்த்து, மற்றவர்களைவிட தாங்கள் தான் கடினமான பாதைக்கூடாக போகின்றோம் என்று எண்ணிக் கொள்வதுண்டு. சில வேளைகளிலே, மற்றவர்களுடைய வாழ்க்கையின் சில காரியங்களை அறியும் சந்தர்ப்பம் ஏற்படும் போது, மற்றவர்கள் போகும் பாதை எவ்வளவு துன்பமாக இருக்கின்றது என்பதை உணர்ந்து கொள்கின்றார்கள். இப்படியாக மனிதர்கள் மற்றய மனிதர்களுடைய நிலைமை அறிந்து கொள்வது கடினமாக இருந்து வரு கின்றது. ஆனால், இருதயங்களை ஆராய்ந்து அறிகின்றவர், மனிதர்களுடைய சிந்தையை அறிந்திருக்கின்றார். ஒவ்வொருவடைய உண்மையான நிலைமையை அறிந்திருக்கின்றார். ஆதலால் தான், தேவ பக்தன், தன் நிலைமையை குறித்து மனிதர்களிடம் கூறாமல், தேவனாகிய கர்த்தரை நோக்கி: “எனக்கு இரங்கும் கர்த்தாவே, நான் நெருக்கப்படுகிறேன் துக்க த்தினால் என் கண்ணும் என் ஆத்துமாவும் என் வயிறுங்கூடக் கருகிப் போயிற்று. என் பிராணன் சஞ்சலத்தினாலும், என் வருʻங்கள் தவிப்பினாலும் கழிந்துபோயிற்று. என் அக்கிரமத்தினாலே என் பெலன் குறைந்து, என் எலும்புகள் உலர்ந்துபோயிற்று. என் சத்துருக்களாகிய யாவர் நிமித்தமும், நான் என் அயலாருக்கு நிந்தையும், எனக்கு அறிமுகமான வர்களுக்கு அருக்களிப்புமானேன் வீதியிலே என்னைக் கண்டவர்கள் எனக்கு விலகி ஓடிப்போனார்கள். செத்தவனைப்போல எல்லாராலும் முழுவதும் மறக்கப்பட்டேன் உடைந்த பாத்திரத்தைப் போலானேன். அநேகர் சொல்லும் அவதூறைக் கேட்டேன் எனக்கு விரோதமாக அவர் கள் ஏகமாய் ஆலோசனை பண்ணுகிறதினால் திகில் என்னைச் சூழ்ந்துகொண்டது. என் பிராணனை வாங்கத்தேடுகிறார்கள். நானோ கர்த்தாவே, உம்மை நம்பியிருக்கிறேன் நீரே என் தேவன் என்று சொன்னேன்.” என்று தன் நிலைமைய சங்கீதமாக பாடியிருக்கின்றார். சில வேளைகயிலே நில மனிதர்கள் உங்கள் நிலையை சற்று அறிந்து ஆதரவாக இருக்கலாம். ஆனால், நம்மைப் படைத்தர் மாத்திரமே, நம் உண்மையான நிலைமையை அறிந்திருக்கின்றார். அவரிடம் உங்கள் நிலையை கூறி, அவருடைய நேரத்திற்காக காத்திருங்கள்.

**சங்கீதம் 31:14**

**நானோ கர்த்தாவே, உம்மை நம்பியிருக்கிறேன்; நீரே என் தேவன் என்று சொன்னேன்.**

**ஜெபம்:** என்னை உருவாக்கிய தேவனாகிய கர்த்தாவே, என் கன்மலையும் என் கோட்டையும் நீரே. உமது நாமத்தினிமித்தம் நான் நடக்க வேண்டிய வழியை எனக்கு போதித்து, உம்முடைய நித்திய வழியிலே நடத்தியருளும். இரட்சகர்இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# மேலானவைகளை மகிழ்சியோடு நாடுங்கள்

**மத்தேயு 6:33**

**முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்; அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்.**

இந்நாட்களிலே கர்த்தருடைய மலைப் பிரசங்கத்தின், மத்தேயு ஆறாம் அதிகாரததின் கடைசி வசனங்களைக் குறித்து, தியானம் செய்து வருகின்றறோம். அதன் கருப்பொருளாவது, இந்த உலகத்தில் வாழ உங்களுக்கு தேவையானவைகளைக் குறித்து கவலையடையடைந்து நோக்கம் இழந்து போகாமல், தேவனுடைய ராஜ்யத்தை முதன்மை யாக தேட வேண்டும் என்பதை குறித்து கர்த்தர் தெளிவாக கூறியிருக்கின்றார். தேவனுடைய ராஜ்யத்திற்கு உட்பட்டவர்கள் தேவனை நம்பி வாழ்வதால், இந்த உலகத்தின் ராஜ்யத்திற்கோ, அதை ஆளுகை செய்யும் இருளின் அதிகாரத்திற்கோ உட்பட்டவர்கள்அல்ல. தேவனுடைய ராஜ்யத்திற்கு உட்பட்ட தேவ புத்திரர்களை பயம் ஆட்கொண்டு, அவர்களுக்குள் நிலைத்திருப்பதில்லை. அவர்கள் பயப்படும் நாளிலே, தங்களை படைத்த தேவனை நம்பியிருப்பதால். அவர்கள் தேவன்மேல் கொண்டுள்ள விசுவாசத்தால், பயத்தை மேற்கொள்கின்றார்கள். பஞ்சைத்தைக் குறித்தோ, பொருளாதார வீழ்ச்சியைக் குறித்தோ, யுத்தங்களின் செய்தியை குறித்து அவர்கள் திகிலடைவதில்லை. ஏனெனில், உலகத்தை ஜெயித்தவர் அவர்களோடு இருப்பதால், அவர்கள் விசுவாசத்திலே நிலைத்திருக்கின்றார். ஆனால், இந்த உலகத்தின் ராஜ்யத்திற்குட்டவர்களை பயம் மேற்கொண்டு அவர்கள் சிந்தையை ஆட்கொள்வதால், அவர்கள் உலக செய்திகளை கேட்டு, பயந்து, கலங்கி, திகிலடைகின்றார்கள். அதனால், நாளையை குறித்த கவலை அவர்களை வாட்டுகின்றது. எப்போதும் உழைக்க வேண்டும், சேமிக்க வேண்டும். எதிர்காலத்திற்காக முதலீடு செய்ய வேண்டும் என்று இந்த உலகத்தின் செல்வத்தைக் குறித்த காரியங்களையே நாடித் தேடுகின்றார்கள். “மனுஷன் அப்பத்தினாலேமாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்” என்ற சத்தியத்தை அறியாமலும், அறிந்தவர்களில் சிலர் உணராமலும் வாழ்ந்து வருகின்றார்கள். எதிர்காலத்தைக் குறித்து எப்போதும் கவலையடைந்து, நிம்மதியை இழந்து, எப்போதும் நிலை தவறி, மனம் பதறினவர்களாக வாழ்கின்றார்கள். தேவனுடைய ராஜ்யத்திற்கென்று அழைக்கப்பட்ட தேவ பிள்ளைகளே, நாளையை குறித்து கவலையடையாமல் தேவனை நோக்கி பாருங்கள்.

**ஜெபம்:** அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும் என்று கூறிய தேவனே, நான் என் எதிர்காலத்தைக் குறித்து கவலையடையாமல், நித்தியத்திற்குரியதை மகிழ்சியோடு பற்றிக் கொள்ள எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

சனி | செப்டெம்பர் 20

📖 மாலை வாசகம் – எபேசியர் 4:13

# வேத வார்த்தைகளின் நோக்கம்

**2 தீமோத்தேயு 3:16**

**வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப் பட்டிருக்கிறது;**

நாம் வாழ்ந்து வரும் இந்த உலகத்திலே, குற்ற உணர்வில்லாமல் பாவம் செய்ய வேண்டும் என்ற எண்ணமானது வளர்ந்து கொண்டிருப்பதை காண்கின்றோம். எடுத்துக்காட்டாக, தேவனாகிய கர்த்தர் தாமே பாவம் என்று விலக்கிய ஒரு காரியத்தை, நாட்டின் சட்டமாக மாற்றிவிட்டால், இனி அது குற்றமில்லை என்று பலர் எண்ணிக் கொள்கின்றார்கள். தங்கள் மனசாட்சி என்ன கூறுகின்றது என்பதை சிந்திப்பதில்லை அல்லது அவர்களுடைய மனசாட்சியானது சூடுண்டு கடினப்பட்டு போய்விட்டதால், தாங்கள் செய்யும் பாவமான காரியங்களை, பாவமில்லை என்று வாழ்ந்து வருகின்றார்கள். கர்த்தருடைய வேதத்தை அரைகுறையாக அறிந்தவர்கள், வேதத்திலுள்ள வார்த்தைகளை தாங்கள் தப்பித்துக் கொள்வதற்காக பயன்படுத்தி வருகின்றார்கள். “நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்.” என்று ஆண்டவராகிய இயேசு மலைப் பிரசங்கத்திலே கூறியதை மத்தேயு ஏழாம் அதிகாரத்திலே காணலாம். கிறிஸ்தவர்கள் என்று தங்களை அழைத்துக் கொள்ளும் சிலர், இந்த வார்த்தையை தங்கள் தவறுகளிலிருந்து தப்பிக் கொள்ளும்படி சுட்டிக் காட்டுகின்றார்கள். அதாவது, நான் என்ன குற்றத்தை செய்தாலும், ஒருவரும் ஒன்றும் கூறமுடியாது. அப்படி யாராவது எதையும் கூறினால், இந்த வார்த்தையை கூறி, தங்களை நியாயப்படுத்திக் கொள்கின்றார்கள். பாவம் செய்யும் ஒருவனை காணும்போது, நான் பேசாமல் விட்டுவிட்டு என் பாட்டிக்கு போய்விட்டால், நான் பாவம் செய்யும் போது, என் பாவம் குற்றமாக இருக்காது என்று கூற முடியுமோ? முடியாதே! ஆதலால், வேத வார்த்தைகள் கொடுக்கப்பட்ட நோக்கத்தை அறிந்து கொள்ள வேண்டும். அவைகளின் மேலானதும், முதன்மையானதுமான நோக்கம் நித்திய ஜீவனுக்குரியது. “வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது் தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும் சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது.” *2 தீமோத்தேயு 3:16,17*ம் வசனங்களிலே வாசிக்கின்றோம். எனவே, அந்த நோக்கத்தை மறக்காமல், நித்திய ஜீவனையடையும்படி முன்னேறிச் செல்வோமாக.

**ஜெபம்**: நித்திய வாழ்விற்காக என்னை அழைத்த தேவனே, நான் உம்முடைய வார்த்தைகளின் நோக்கத்தை மறந்து, என் கிரியைகளை நியாயப்படுத்த தவறான முறையிலே அவைகழள கூறாதபடிக்கு காத்துக் கொள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

📖 மாலை வாசகம் – மத்தேயு 7:13

# "வழிகாட்டி"

ஒரு கிராமத்திலே வசித்து வந்த மனிதனானவன், அதிகாலையிலே எழுந்து மாடுகளை வண்டிலிலே இணைத்து, காய் கறிகளையும், தானியங்களையும் வண்டிலிலே ஏற்றி, சந்தைக்கு சென்று கொண்டிருந்தான். ஆனால், கிழக்கு திசையிலே இருக்கும் ஊரிலுள்ள சந்தைக்கு செல்கின்றேன் என்று கூறி, மேற்கு திசையை நோக்கி வண்டிலை ஓட்டிச் சென்றான். போகும் வழியிலே அந்த ஊரிலுள்ள மூப்பரொருவர், அவனை நோக்கி: அதிகாலையிலே என்ன இந்தப் பக்கமாக போகின்றாய் என்று கேட்டார். அதற்கு அவன், பெரியரே, பார்க்க சந்தைக்கு போகின்றேன் தெரியவில்லையா? என்று கேட்டான். நீ இந்தப் பக்கமாக போனால் இன்றைக்கல்ல, நாளையானாலும் சந்தைக்கு போய் சேரமாட்டாய். சந்தை இருக்கும் ஊர் இந்தப் பக்கமல்ல, எதிர்பக்கமாக இருக்கின்றது, வண்டிலை நிறுத்தி, திருப்பி, எதிர்பக்கமாக போ என்று அந்த மனிதனுக்கு கூறினார். இந்த சம்பவத்தை சற்று ஆராய்ந்து பாருங்கள். அந்தப் பெரியவர் கூறியது மறுமொழியாக "நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்" என்று அந்த மனிதனாவன் கூறுவானாக இருந்தால், அவனைக் குறித்து என்ன சொல்வது? அவன் இந்த வார்த்தையை தவறாக புரிந்து கொண்டவனாக இருப்பான். "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்." "நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான் என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது." "என்னோடே இராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான் என்னோடே சேர்க்காதவன் சிதறடிக்கிறான்." என்று ஆண்டவராகிய இயேசுதாமே, திட்டமாகவும், தெளிவாகவும் கூறியிருக்கின்றார். ஒருவன் வேறு ஆண்டவர் இயேசுவை விசுவசிக்காமல் வேறு வழியாய் போய் கொண்டிருக்கும் போது, அவனிடம் இந்த வார்த்தைகளை கூறுவது அவனை குற்றவாளியாக தீர்ப்பது அல்ல. மாறாக, அவன் முடிவிலே குற்றவாளியாக காணப்படாதபடிக்கு, அவன் சத்திய வழியாகிய, நித்திய ஜீவனைக் கண்டடையும் வழியாகிய உலகத்தின் பாவங்களை சுமந்து தீர்த்த ஒரே வழியாகிய மீட்பர் இயேசுவை அவனுக்கு காண்பிப்பதாக இருக்கும்.

**யோவான் 14:6**

**நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்.**

**ஜெபம்**: பரலோகத்திற்கு வழிநடத்தும் தேவனே, நீர் தந்திருக்கும் வாழ்வு தரும் வசனங்களை நான் புரிந்து கொண்டு, அந்த வசனங்களின்படி என் வாழ்வின் வழியை சீர்படுத்த நீர் எனக்கு பிரகாசமுள்ள மனக்கண்ணை தந்த நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நல்ல போதனைகள்

பாசாலையிலே எட்டாம் வகுப்பு படிக்கும் மாணவனானுக்கு, முதல் தவணைக்குரிய பரீட்சை முடிவுகள் அறிக்கை கொடுக்கப்பட்டது. அந்த அறிக்கையின்படி அவன் முக்கியமான பாடங்களை தவறவிட்டதால், அவன் அந்தப்பாடங்களிலே சித்தி பெறவில்லை. அவனுடை வகுப் பாரியர் அவனையும் அவன் பெற்றோரையும் அழைத்து, அவனை நோக்கி: இது முதல் தவணை, இன்னும் காலம் இருக்கின்றது. நீ இன்ன பிரகாரமாக உன் வாழ்க்கை ஒழுங்கு படுத்த வேண்டும். எதை யெல்லாம் விட்டுவிட வேண்டும். எப்படியாக படிக்க வேண்டும். என்ன னென்ன காரியங்களிலே கரிசணை செலுத்த வேண்டும் என்று கூறினார். நீ இந்த நிலைமையிலே போவாயாக இருந்தால், நீ இந்த எட்டாம் வகுப்பில் சித்தி பெற மாட்டாய். என்பதை மனதிலே வைத்துக் கொள். என்று அவனை கடிந்து கொண்டு, ஆலோசனை கூறினார். பிரியமான வர்களே, அந்த ஆசிரியர் தன்னுடைய வேலையை முறைப்படி செய் தார். அதனால், அந்த மாணவனுடைய பெற்றோர், நீங்கள் எங்கள் மக னின் மனதை நோகப்பண்ணிவிட்டீர்கள். நீங்கள் கொடுத்த முன்னேற்ற அறிக்கையினாலே என் மகன் வெட்கப் பட்டுப் போனான். இப்படியான தீர்ப்பு கொடுப்பது நாகரீகம் அல்ல என்று கூற முடியுமோ? இல்லை, அதுபோலவே, போதிக்கின்றவர்கள், அவர்கள் பெற்றோரா கவோ, மூத்தவர்களாகவோ, மூப்பர்களாகவோ, போதகர்களாகவோ இருக்க லாம். போதனையிலே, அரவணைப்பு மாத்திரமல்ல, உண்மை யான அன்புள்ள போதனையிலே, அரவணப்போடு, எச்சரிப்பும் கண்டி ப்பும், சீர்திருத்துதலும், வழிகாட்டுதலும், சில வேளைகளிலே தண்டி ப்பும் அடங்கியிருக்கும். அப்படியான போதனைகள் நியாத்தீர்ப்பு அல்ல. நியாத்தீர்பிலே தப்பிக் கொள்ளும் வழியாக இருக்கும். ஆனால், இன்று சிலர், தவறுகள் நடக்கும் போது சுட்டிக் காண்பிக்காமல், அவைகளை பாரா முகமாக விட்டுவிடுகின்றார்கள். தங்கள் ஸ்தாபனங்களை பாவிக ளின்சரணாலயம் என்று கூறிக்கொள்கின்றார்கள். குற்றங் குறைகளை கண்டித்துணர்துவதில்லை. அவர்களை தங்கயோடு தக்க வைப்பதற்காக சத்தியத்தை அவர்களுக்கு மறைத்து வைக்கின்றார்கள். அதனால், சில விசுவா சிகள் தங்கள் தவறுகளை உணராமல், அவகளை துணிகரரமாக செய்து வருகின்றார்கள். நீங்களோ அப்படியிரால், போதனைக்கு செவி கொடு ங்கள். உங்களை வழிகளை தேவ வார்த்தைகளின்படி சீர்ப்படுத்தி சீர்பொருந்துங்கள்.

**2 தீமோத்தேயு 4:2**

**எல்லா நீடிய சாந்தத் தோடும் உபதேசத்தோடும் கண்டனம்பண்ணி, கடிந்து கொண்டு, புத்திசொல்லு.**

**ஜெபம்:** போதித்து நடத்துகின்ற என் தேவனாகிய கர்த்தரே, உம்முடைய ஆலோசனைகளையும் எச்சரிப்புக்களையும் நான் தள்ளிப் போடாமல், அவைகளை நன்மாக கருதி ஏற்றுக்கொள்ள நல்மனதை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# வாழ்க்கையின் உண்மை நிலை

அக்காலத்திலே தேவ ஜனங்களை, நல் வழிப்படுத்தும்படி நியமிக்கப்பட்டவர்கள், கட்டளைகளையும், பற்பல ஒழுங்கு முறைகளையும் தேவ ஜனங்கள் மேல் திணித்து, அவர்களோ அதை பின்பற்றாதிருந்தார்கள். சிறப்பு குடிமக்களாகிய தங்களுக்கு ஒரு அளவுப் பிரமாணத்தையும், திக்கற்றவர்களாகவும், பாவத்திலிருந்து வெளிவர வழி தெரியாமல் தத்தளித்துக் கொண்டிருந்தவர்களுக்கும், ஏனையோருக்கும், ஒரே ரகாரியத்திலே வெவ்வேறான அளவுப் பிரமணங்களை வைத்திருந்தார்கள். அதன்படி அவர்களுக்கு கடுமை யான தீர்புக்களை வழங்கி வந்தார் கள். ஒரு சமயம், இயேசு ஜனங்களையும் தம்முடைய சீஷர்களையும் நோக்கி: வேதபாரகரும் பரிசேயரும் மோசேயினுடைய ஆசனத்தில் உட்கார்ந்திருக்கிறார்கள். ஆகையால், நீங்கள் கைக்கொள்ளும்படி அவர்கள் உங்களுக்குச் சொல்லுகிற யாவையும் கைக்கொண்டு செய்யுங்கள் அவர்கள் செய்கையின்படியோ செய்யாதிருங்கள் ஏனெனில், அவர்கள் சொல்லுகிறார்கள், சொல்லியும் செய்யாதிருக்கிறார்கள். சுமப்பதற்கரிய பாரமான சுமைகளைக் கட்டி மனுஷர் தோள்களின்மேல் சுமத்துகிறார்கள் தாங்களோ ஒரு விரலினாலும் அவைகளைத் தொடமாட்டார்கள். மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, போஜனபானபாத்திரங்களின் வெளிப்புறத்தைச் சுத்தமாக்குகிறீர்கள் உட்புறத்திலோ அவைகள் கொள்ளையினாலும் அநீதத்தினாலும் நிறைந்திருக்கிறது. மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளுக்கு ஒப்பாயிருக்கிறீர்கள், அவைகள் புறம்பே அலங்காரமாய்க் காணப்படும், உள்ளேயோ மரித்தவர்களின் எலும்புகளினாலும் சகல அசுத்தத்தினாலும் நிறைந்திருக்கும். என்று அவர்களுடைய உண்மையான நிலைமைக் குறித்து கூறினார். அவர்களில் அநேகர் இப்படியான வாழ்க்கை வாழ்ந்து, எளியவர்களையும், சிறுமைப்பட்டவர்களையும் ஒடுக்கி, நியாய ஆசனத்தில் இருந்து, அற்பமான குற்றங் குறைகளை செய்பவர்களுக்கு இரக்கமற்ற தீர்ப்பு வழங்கி வந்தார்கள். எனவே நாம் எந்த அளவினாலே மற்றவர்களை அளக்கின்றோம் என்பதைக் குறித்து எச்சரிக்கையுள்ளவர்களாக இருக்க வேண்டும். முதலாவதாக நாம் நம்மை தேவ வார்த்தையின் வெளிச்சத்திலே ஆராய்ந்து அறிய வேண்டும். நாம் எப்படியாக மற்றவர்களை பார்க்கின்றோம் என்பதைக் குறித்து எச்சரிக்கையுள்ளவர்களாக இருக்க வேண்டும்களுக்கும் அளக்கப்படும்.

**மத்தேயு 7:2**

**நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும்.**

**ஜெபம்:** இருதயங்களை ஆராய்தறிக்கின்ற தேவனே, என் உள்ளத்திலே நான் உண்மையாக இருக்கவும், மற்றவர்களுடைய நிலைமைக் குறித்து இரக்கமுள்ளவனாக இருக்கவும் உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

📖 மாலை வாசகம் – மத்தேயு 7:1 – 4

# கண்கள் எதை நோக்குகின்றது?

ஒரு பாடசாலையின் வகுப்பாசியர் வகுப்பொன்றிற்கு வர தாமத் தித்த தினால், மாணவர்களில் சிலர் சில குற்றங்களை செய்து விட்டார்கள். ஆசிரியர் வகுப்பிற்கு வந்தவுடனே, குற்றம் செய்தவர்களில் தந்திரமு ள்ளவன் எழுந்து, சேர்! இந்த பையன் உங்களைப் போல நடித்து, உங்களைக் கேலி செய்து காண்பித்தான். எல்லோரும் சிரித்தார்கள், இவர்களுக்கு தகுந்து பாடம் கற் பிக்க வேண்டும் என்று கூறி னான். அதை கேட்ட அந்த ஆசி ரியர் கோபமடைந்து, அந்த பைய னையும் மற்றவர்களையும் அழைத்து அவர்களை விசாரி த்து, பாடசாலை ஒழுங்கின்படி அவர்களை கண்டித்து தண்டி த்தார். குறிப்பிட்ட பைனும், அவ னைச் சேர்ந்தவர்களும் தவறு செய்தது உண்மை. தந்திரமுள்ள குழப்பவாதியாகிய அந்த மாணவன் குறியதும் உண்மை. ஆனால், அவன் ஏன் எல்லோருக்கும் முந்திக் கொண்டான்? தான் செய்த குற்றத் தைக் குறித்து ஒருவரும் பேசாதபடிக்கும், ஆசிரியருடைய கவனத்தை திருப்பிக் கொள்ளும்படிக்கும், அவன் மற்றவர்களுடைய குற்றங்களைக் குறித்து மிகவும் கருத்துள்ளவனாக இருந்தான். இன்று குடும்பங்கள், உறவினர், வேலையிடங்கள், சபைகளிலே இப்படியான காரியங்கள் நடைபெறுகின்றதல்லவா? சிலர், தங்களுடையதும் தங்கள் பிள்ளை களுடையதுமான வாழ்க்கையை சீர்திருத்தி சீர்பொருந்த கொடுக்கும் நேரத்தைவிட மற்றவர்களுடைய குற்றங்களை ஆராய்ந்து அறிவதிலும், அந்தக் குறைகளை சபை சந்தியிலே வெளி கொண்டுவருதிலும், அதி கபடியான நேரத்தை செலவு செய்கின்றார்கள். ஒருவன் ஏறத்தாழ யாவ ற்றிலும் நிறைவுள்ளவனாக இருந்தாலும், அந்த நிறைவை கண்டு அவனை பாராட்டாமல், அவன் தன் வாழ்க்கையில் சந்தித்து வரும் ஒரு சில சவால்களைக் குறித்தே பேசிக் கொள்வார்கள். "சுத்தமுள்ளவர்க ளுக்குச் சகலமும் சுத்தமாயிருக்கும் அசுத்தமுள்ளவர்களுக்கும் அவிசுவாசமுள்ளவர்களுக்கும் ஒன்றும் சுத்தமாயிராது. அவர்களுடைய புத்தியும் மனச்சாட்சியும் அசுத்தமாயிருக்கும்." கர்த்தருடைய இரக்கம் இவர்கள் வாழ்வில் வெளிப்படாவிட்டால் இவர்களின் முடிவு எப்படியாக இருக்கும் என்பதை நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அறிவார். எனவே நம்மை நாம் ஆராய்ந்து கர்த்தரிடத்திலே திரும்பக்கடவோம். அவர் மனந்திரும்புகின்ற உள்ளத்தை விரும்புகின்றார்.

**ரோமர் 2:1**

**நீ குற்றமாகத் தீர்க்கிறவைகள் எவைகளோ, அவைகளை நீயே செய்கிறபடியால், நீ மற்றவர்களைக்குறித்துச் சொல்லுகிற தீர்ப்பினாலே உன்னைத்தானே குற்றவாளியாகத் தீர்க்கிறாய்.**

**ஜெபம்:** அன்பின் தேவனே, உம்முடைய தயவு பொறுமை நீடியசாந்தம் இவைகளின் ஐசுவரியத்தை அசட்டைபண்ணாமல், நான் குணப்படும்படி நீர் எனக்கு கொடுத்த காலத்தை ஆதயப்படுத்திக் கொள்ள கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# "குற்றத்திற்கு தண்டனை"

ஒரு தொழிற்சாலையிலே நூற்றுக் கணக்கான ஊழியர்கள் வேலை செய்து வந்தார்கள். அந்த தொழிற்சாலையின் குறிப்பிட்ட பகுதிக்கு இயக்குணராக இருந்து வந்த மனிதனாவன், தனக்கு கீழே வேலை பார்த்து வரும் ஊழியர்களை மிகவும் கடுமையான நடத்தி வந்தான். ஒரு நாள், நாளாந்த கூலிக்கு வேலை செய்யும் ஊழியனொருவன், அங்குள்ள அற்பமான பொருளொ ன்றை வீட்டுக்கு எடுத்துச் சென்றதை அந்த இயக்குணர் அறிந்து கொண் டான். அடுத்த நாளே, அவனை அநேகர் முன்னிலையில் வைத்து, கடு மையான தண்டித்து, அவமா னப்படுத்தி, வேலை நீக்கம் செய் தான். அவன் செய்த குற்றத்திற்கு அந்த தண்டனை அவனுக்கு மிகவும் பார மாக இருந்தது. ஆனால், அந்த இயக்குணரோ, கால காலமாக, லஞ்சம் வாங்குவதிலும், தொழிற்சாலைக்கு சொந்தமான, கனமான பொருட்களை தனதாக்கி கொள்வதும் வழக்கமாக இருந்து வந்தது. அவன் பெருங் குற்றங்களை செய்து வந்த போதும், அதைக் குறித்து எந்த உணர்வும் இல்லாதவனாக, அற்பமானவர்களையும், எளிமையான வர்களையும் கடுமையாக தண்டித்து வந்தான். குற்றம் செய்தவனுக்கு தண்டனை வழங்குவது புதிதான காரியம் அல்ல. ஆனால், நீதி செய்கின்றவன், அதே குற்றத்தை அளப்பெரியதாக செய்து கொண்டு, அற்பமான குற்றங்களை செய்வர்களுக்கு எப்படி நீதி செய்ய முடியும்? இப்படிப்பட்ட காரியங்களால் தேவ ஜனங்கள் அன்று துன்புறு த்தப்பட்டார்கள். இதனால், பாவிகள் விடுதலைக்கு வழி தெரியாமல் தவித்து வந்தார்கள். நம்முடைய ஆண்டவராகிய இயேசு வழியாக நாம் மீட்கப்பட்டோம். அதன் கருப்பொருளாவது, முன்பு நாம் பாவங்க ளினாலும், துரோகங்களினாலும் தொலைந்து போயிருந்தோம். இப்படி யான பெரும் இரக்கத்தை பெற்றிருக்க, உடன் சகோதரர்களுக்கு நாம் இரக்கம் காண்பிக்க கற்றுக் கொள்ள வேண்டும். அதே நேரத்திலே, "நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல், உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிறதென்ன? இதோ, உன் கண்ணில் உத்திரம் இருக்கையில் உன் சகோதரனை நோக்கி: நான் உன் கண்ணிலிருக்கும் துரும்பை எடுத்துப்போடட்டும் என்று நீ சொல்வதெ ப்படி? மாயக்காரனே! முன்பு உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை எடுத்துப்போடு பின்பு உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத் துப்போட வகைபார்ப்பாய் என்று ஆண்டவராகிய இயேசு கூறியிரு க்கின்றார்.

**மத்தேயு 7:3**

**நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல், உன் சகோதரன் கண்ணி லிருக்கிற துரும்பைப் பார்க்கிறதென்ன?**

**ஜெபம்:** இரக்கத்தில் ஐசுவரியமுள்ள தேவனே, நீர் எனக்கு பாராட்டின இரக்கம் பெரியது. உமுக்கு முன்பாக நான் அநியாயம் செய்கின்றவனாக காணப்படாதபடிக்கு நீர் எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட் சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# வேதத்தை மறந்து போய்விடாதிருங்கள்

ஒரு சபையிலே குறிப்பிட்ட விசுவாசியானவனின் பிள்ளைகளில் ஒருவன், தவறான பழக்க வழக்கங்களுடைய நண்பர்களோடு சேர்ந்து, சில குற்றச் செயல்களை செய்து வந்தான். அந்த செய்தியை அறிந்த சபையின் மூப்பரானவர் ஒருவர், அந்த விசுவாசியை அணுகி, தயவாக நடக்கும் சம்பத்தை கூறி, அதை ஆரம்பத்திலேயே சீர்திருத்தம் செய்யாவிட்டால், பாரிய பின்விளைவுகள்ஏற்படும் என்று கூறினார். அதைக்கேட்ட அந்த விசுவாசியா னவன், கோபமடைந்து, மூப்பரை நோக்கி: இந்த சபையிலே இருக்கின்றவர்கள் எல்லோரும் பரிசுத்தவான்களோ? நீயும் உன் குடும்பத்தாரும் குற்றமி யாதவர்களோ? நீ சின்ன வயதிலே செய்யாத குற்றத்தையா என் மகன் செய்கின்றான்? "இதோ, உன் கண்ணில் உத்திரம் இருக்கையில் உன் சகோதரனை நோக்கி: நான் உன் கண்ணிலிருக்கும் துரும்பை எடுத்துப் போடட்டும் என்று நீ சொல்வதெப்படி?" என்று கூறி, அந்த சந்தர்பத்தி லிருந்து தப்பித்துக் கொண்டான். தன் மகனானவனை மூப்பரின் கண்களிலிருந்து காப்பாற்றி விட்டேன் என்று எண்ணிக் கொண்டான். பிரியமான சகோதர சகோதரிகளே, ஆண்டவராகிய இயேசு சந்தர்பத் திலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக இந்த வசனத்தை கூறவில்லை. தேவனுடைய வசனம், வழக்குக்கும் வாதுக்கும் கொடுக்கப்படவில்லை. மனிதகுலம் நித்திய ஜீவனை அடைந்து கொள்ளும்படிக்கே தம்முடைய வார்த்தைகளை கொடுத்தார். இந்நாட்களிலே, சில விசுவாசிகள் சீர்திரு த்தத்தை தள்ளிவிட்டு, சந்தர்ப்பத்திற்கேற்றபடி, தேவ வார்த்தைகளை தவறாக புரிந்து கொண்டு தங்கள் குடும்பங்களை பாதுகாக்கின்றோம் என்று எண்ணிக் கொள்கின்றார்கள். மனிதன் எதை விதைக்கின்றானோ அதையே அறுப்பான் என்பதை மறந்து போய்விடுகின்றார்கள். வேத வார்த்தைகளை புரட்டுகின்றவர்கள் காலப்போக்கிலே பாதகமான பின்விளைவுகளுக்கு தங்களை ஆயத்தப்படுத்திக் கொள்கின்றார்கள். ஒவ்வொரு விசுவாசியும், வேத வார்த்தைகளை தினமும் வாசித்து அந்த வார்த்தைகளின் வெளிச்சத்திலே தன் தன் வாழ்க்கையை ஆராய்ந்து அறிந்து, வேதனை உண்டாக்கும் வழிகளை விட்டு விலகி, கர்த்தரி த்திலே திரும்ப வேண்டும். வேதத்தையும் அதன் பிரதான நோக்க த்தையும் மறந்து போய்விடாதிருங்கள். "நீ உன் தேவனுடைய வேத த்தை மறந்தாய், ஆகையால் நானும் உன் பிள்ளைகளை மறந்து விடுவேன்." என்ற வார்த்தையை ஞாபகத்திலே வைத்திருங்கள்.

**நீதிமொழிகள் 12:1**

புத்திமதிகளை விரும்புகிறவன் அறிவை விரும்புகிறான்; கடிந்துகொள்ளுதலை வெறுக்கிறவனோ மிருககுணமுள்ளவன்.

**ஜெபம்:** சீர்பொருந்துதலுக்காக அதிகாரங்களை ஏற்படுத்திலே தேவனே, உம்முடைய வேதத்தையும் அதன் கருப்பொருளையும் மறந்து போய்விடாதபடிக்கு எனக்கு உணர்வுள்ள இருயத்தை தந்து வழிநடத்தி செல்வீராக. இரட் சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பழைய வாழ்க்கையின் அனுபவங்கள்

வாலிப பிரயாத்திலிருந்து மிகவும் துன்மார்க்க வழியிலே வாழ்ந்த மனிதனொருவன், தன் வாழ்க்கையை அழித்துப் போடும் தறுவாயிலே ஆண்டவர் இயேசு அவனை சந்தித்தார். இது வாழ்க்கையின் முடிவு இல்லை. ஒரு புதிய ஆரம்பம் உண்டு என்ற நற்செய்தி அவனுக்கு அறிவிக்கப்பட்டது. உன் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும் உறைந்த மழையைப்போல் வெண்மை யாகும் அவைகள் இரத்தாம்பரச் சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப் போலாகும். ஏன்று வார்த்தை யினாலே அவன் தேற்றப்பட்டு, மீட்பை பெற்றுக் கொண்டார். சில ஆண்டுகளுக்கு பின்னர் தன் வாழ்க்கை ஆண்டவர் இயேசுவின் திருப்பணிக்கென்று ஒப்புக்கொடுத்து, தன் முன்னைய வாழ்க்கையைப் போல அழிந்து போகின்ற ஆத்து மாக்களை சந்திக்க வேண்டும், அவர்களுக்கு நல் வழியை காண வேண்டும் என்று தீர்மானித்தார். சபையின் மேய்பராக இருந்து வந்த அவன், ஒரு நாள் சபைக்கு வரும் ஒரு வாலிபனை கண்டு, நீ போக்கின்ற வழி, தவறானது, அதிலே மிகவும் வேதனைகள் உண்டு என்று தயவாக கூறினார். அந்த வாலிபன் அவரை நோக்கி, நீங்கள் உங்கள் வாலிப பிரயாகத்தில் செய்த குற்றங்களில் ஒரு வீதம் கூட நான் செய்யவில்லையே. நீங்கள் எப்படி எனக்கு அறிவுரை கூற முடியும் என்றான். அந்த மேய்பரானவர் சிரித்து விட்டு, தம்பி, பல வருடங்களுக்கு முன்பாக நானும், உன்னைப் போல சிறிய தவறுகளை செய்ய ஆரம்பித்தேன். சிலர் என்னை சந்தித்து புத்திமதி கூறினார்கள். நான் அதை அசட்டை செய்துவிட்டு, என் வழியே போய்விட்டேன். அதன் பின் என் வாழவில் ஏற்பட்ட வேதனைகயும் அதன் பின்விளைவுகளையும் நான் நன்றாக அறிந்திருக்கின்றேன். ஆண்வர் இயேசுவை அறியாத காலங்களிலே வழிதப்பிக் போனேன். நீயோ இந்த அருமையான இரட்சிப்பை வாலிப பிரயாத்திலே பெற்ற கொண்ட பின்பு, மறுபடியும் பாவத்திற்குள் போனால், முடிவு என்னவாயிருக்கும் என்று கண்ணீரோடு அவனுக்கு மறுமொழி கூறினார். பிரியமான வர்களே, உங்களுக்கு அறிவுரை கூறுபவர்களின் அனுபங்களை அற் பமாக எண்ணாதிருங்கள். ஒருவேளை அவர்கள் இருளான வாழ் க்கைக்குள் இந்திருக்கலாம் அதனால் அவர்கள் அந்த இருளின் பயங்கரத்தை அனுபவமாக கண்டிருப்பார்கள். எனவே, அறிவுரைகளை கேட்டு, மனதை கடினப்படுத்தாமல் ஞானமடையுங்கள். கர்த்தரை பற்றிக் கொள்ளுங்கள் அப்போது நீங்கள் நிலைவரப்படுவீர்கள்.

**நீதிமொழிகள் 8:33**

நீங்கள் புத்தியைக் கேட்டு, ஞான மடையுங்கள் அதை விட்டு விலகாதிருங்கள்.

**ஜெபம்**: பரலோக தேவனே, மற்றவர்களுடைய பழைய வாழ்க்கையை நான் இப்போது செய்யும் பாவங்களை நியாயப்படுத்தும்படி சுட்டிக் காண்பிக்காமல் உம் வார்த்தைகளால் உணர்வடைய கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# குணப்படாத இருதயம் வேண்டாம்

ஒரு கிராமத்திலே இயங்கி வந்த தானதர்மங்கள் செய்யும் ஸ்தாபத்தின் அதிகாரி ஒருவர், அந்த ஸ்தாபனத்தை வெற்றிகரமாக முன்னெடுத்துச் சென்றார். அதாவது, அந்த ஸ்தாபனத்தின் குறிக்கோள் மற்றும் இலக்குகள் யாவும் குறித்த காலத்திலே நிறைவேற்றபற்றது. வரவு அதி கமாகவும், செலவு ஒதுக்கீடு செய்யப்பட்ட கணக்கிற்கு குறைவாகவே இருந்து வந்தது. ஆனால், அந்த இலக்குகள் எப்படி நிறைவேற்றப்ப ட்டது? அந்த அதிகாரி, தனக்கு கீழே வேலை பார்க்கும் பணியாளர்கள், தொண்டர்களுடைய விடயங்களிலே சற்று கடுமையாக இருந்து, அவர் கள் தவறும் போது, நீதி நியாய ங்களை முறைப்படி நடைமுறைப் படுத்தி வந்தார். ஆனால், தன்னுடைய காரியங்களிலே, திருத்தப்பட வேண் டியவைகளை பாரமுகமாக விட்டுவிட்டு, ஸ்தாபனத்தின் இலக் குகளை தான் திறப்பட நிறைவேற்றி வருகின்றேன் என்று தலைவ ர்களுக்கும், நலன் விரும்பிகளுக்கும் கூறி வந்தார். ஸ்தாபனமானது கணக்கியல் ரீதியில் நன்றாக இயங்கி வந்ததால், தலைவர்கள் மேற் கொண்டு எதையும் பேசாதிருந்தார்கள். பிரியமான சகோதர சகோத ரிகளே, நம்முடைய தேவனாகிய கர்த்தர் மனுஷன் பார்க்கிற பிரகார மாக பார்கின்றவர் அல்ல. அவன் மனிதர்களுடைய இருதங்களை ஆராய்தறிகின்றார். அவரிடத்திலே பட்சபாதம் இல்லை. என்னுடைய இருதயத்திற்கு ஒத்த மனுஷன் என்று தேவனாகிய கர்த்தர் கூறிய தாவீது ராஜாவானர், பிறனுக்கு விரோதமாக பாவம் செய்த போது, அவர் தாவீது ராஜாவை பாரா முகமாக விட்டுவிடவில்லை. மேற்கூறிய சம்பவத்திலே, அந்த அதிகாரி, எல்லாவற்றிற்கும் மேலாக இருக்கின்ற தேவனாகிய கர்த்ரை அறிந்திருந்த போதும், தன் இருதயத்திலே உணர்வற்றவராக இருந்தார். தான் ஊருக்கு நன்மை செய்கின்றேன், என்னாலே, அந்த ஊரிலே அநேகர் வாழ்வாதாரத்தை பெற்றுக் கொள்கின்றார்கள் என்று எண்ணிக் கொண்டார். அந்த அதிகாரி குணப்படும்படி, தேவ தயவானது தன்னை ஏவுகின்றது என்று அறியாமல், தேவனுடைய தயவு பொறுமை நீடியசாந்தம் இவைகளின் ஐசுவரியத்தை அசட்டைபண்ண்ணி வந்தார். நீங்களோ மற்றவர்களை குற்றப்படுத்த முன்பு, அதே குற்றத்தை நீங்கள் செய்கின்றீர்களாக என்பதை ஆராய்ந்து அறிந்து கொள்ளுங்கள். தேவனுக்கு முன்பதாக யாவும் வெளியரங்கமாகயிருக்கின்றது.

**ரோமர் 2:6**

**தேவன் அவனவனுடைய கிரியைகளுக்குத்தக்கதாய் அவனவனுக்குப் பலனளிப் பார்.**

**ஜெபம்:** நித்திய ஜீவனுக்கென்று என்னை அழைத்த தேவனே, நான் சோர்ந்துபோகாமல் நற்கிரியைகளைச் செய்து, மகிமையையும் கனத் தையும் அழியாமையையும் கருத்தோடு தேட எனக்கு கிருபை செய் வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நியாயத்தீர்ப்பும் சீர்திருத்தமும்

சீர்திருத்தற்திற்கும் நியாத்தீரப்புக்கும் உரிய வேற்றுமைகளை நாம் நன்றாக அறிந்து கொள்ள வேண்டும். இரண்டோடு இன்னும் இரண்டை கூட்டினால், எத்தனையாகும் என்று ஒரு சிறு பைனிடம் கேட்கும் போது, அவன் அதற்கு பதினாறு என்று பதில் கூறினால். முதலாவதாக, அந்த பதில் பிழை என்று அந்த சிறு பையனுக்கு தெரியப்படுத்த வேண்டும். அதன் பின்னர், சரியான பதில் என்ன என்பதையும், அதை எப்படி கணகிடுவது என்பதையும் அவனுக்கு சொல்லிக் கொடுக்க வேண்டும். இது நியாயத்தீர்பு அல்ல. இது திருத்தம். அது போலவே, வாலிபர்கள், பெரியோர், முதியோர், தேவ வார்த்தையைவிட்டு விலகும் போது, முதலாவதாக, அவர்கள் வழி விலகிப் போகின்றார்கள் என்பதை அவர்களுக்கு சொல்ல வேண்டும். முதிர்வயதுள்ளவனைக் கடிந்துகொள்ளாமல், அவனைத் தகப்பனைப்போலவும், பாலிய புருஷரைச் சகோதரரைப் போலவும், முதிர்வயதுள்ள ஸ்திரீகளைத் தாய்களைப்போலவும், பாலிய ஸ்திரீகளை எல்லாக் கற்புடன் சகோதரிகளைப்போலவும் பாவித்து, புத்திசொல்ல சொல்ல வேண்டும் என்றும் சில இடங்களிலே திட்டமாய் கட்டளையிட்டு உபதேசம் பண்ண வேண்டும். பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. அத்தோடு, அதன் பின்விளைவுகள் எப்படியாக இருக்கும் என்று சத்திய வேதம் கூறும் காரியங்களை சுத்தமாக அறிவிக்க வேண்டும். இது நியாயத் தீர்ப்பு அல்ல. இது சீர்திருத்தம். பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்படி தேவன் சபையை உண்டுபண்ணினார். ஆனால், இன்று அன்பு என்ற போர்வையின் கீழ், குற்றங்களை கண்டிக்க கூடாது. மற்றவர்களை நியாயந்தீர்க்க கூடாது என்று என்று சிலர் போதித்து வருகின்றார்கள். இவர்கள் சீர்திருத்தத்திற்கும் நியாத்தீர்ப்புக்கும் இடையேயுள்ள வித்தியாசங்களை அறியாதவர்கள். இப்படிப்பட்ட போதனையை சிலர் தங்கள் ஸ்தாபனங்களிலே எண்ணிக்கையை கூட்டிக் கொள்ள பயன்படுத்துகின்றார்கள். பிரியமானவர்களே, நியாயத்தீர்பின் நாள் நெருங்குகின்றது. “தேவன் அவனவனுடைய கிரியைகளுக்குத்தக்கதாய் அவனவனுக்குப் பலனளிப்பார். சோர்ந்துபோகாமல் நற்கிரியைகளைச் செய்து, மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்தியஜீவனை அளிப்பார்.” எனவே, நாட்கள் பொல்லாதவைகளாக இருப்பதினால் காலத்தை ஆதாயப்படுத்திக் கொள்ளுங்கள்.

**எபேசியர் 4:15**

**அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார்.**

**ஜெபம்**: பரலோக தேவனே, நியாயத்தீர்பின் நாளிலே நான் குற்றமுள்ளவனாக காணப்படாதபடிக்கு, இந்நாட்களிலே சீர்த்திருத்தத்தை உம்முடைய வார்த்தையின்படி ஏற்றுக் கொண்டு நடக்கும் உள்ளத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நீதியை நிறைவேற்றுகின்றவர்கள்

ஒரு பாடசாலையிலே, பத்தாரம் தரத்திற்னாக பொதுப் பரீட்சை நடத்தப்பட்டது. அந்தப் பரீட்சை விடைத் தாள்களை திருத்தும் போது, அந்த ஊரின் அதிகாரியின் பிள்ளைக்கு இலகுவான ஒரு அளவு கோலும், உங்கள் பிள்ளைக்கு சற்றுக் கடினமான அளவுகோலையும் பயன்படுத்தி திருத்தப்பட்டால், நீதியை விரும்பும் எந்தப் பெற்றோர் அதை ஏற்றுக் கொள்வார்கள்? இந்த உலகியலே, அன்று முதல் இன்று வரை சில சந்தர்பங்களிலே நீதியற்ற அளவுகோல்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இவைகள் தேவனுடைய சபைக்குஏற்புடைய காரியங்கள் அல்ல. தேவனாகிய கர்த்தர்தாமே இவைகளை அருவருக்கின்றார். ஒருவேளை நாம் நீதி நியாயம் செய்கின்றவர்களுடைய வேறுபட்ட அளவு கோலால், நியாயமின்றி ஒடுக்கப்பட்டாலும், நாம் வெவ்வேறான அளவுகோலை பயனபடுத்தாதபடிக்கு எச்சரிக்கையுள்ளவர்களாக இருக்க வேண்டும். “வழக்கிலே நீதிமானைத் தோற்கடிக்கிறதற்கு, துன்மார்க்கனுக்கு முகதாட்சிணியம்பண்ணுவது நல்லதல்ல.” (நீதிமொழிகள் 18:5). “நியாயவிசாரணையில் அநியாயம் செய்யாதிருங்கள் சிறியவனுக்கு முகதாட்சிணியம் செய்யாமலும், பெரியவனுடைய முகத்துக்கு அஞ்சாமலும், நீதியாகப் பிறனுக்கு நியாயந்தீர்ப்பாயாக.” (லேவியராகமம் 19:5). வியாச்சியத்திலே தரித்திரனுடைய முகத்தைப் பாராயாக. (யாத்திராகமம் 23:3). ஏன்று அளவு பிரமாணத்தைப் பற்றி வேதத்திலே பல இடங்களிலே காண்கின்றோம். அதிகாரிகள் மத்தியிலே, வேலை இடங்களிலே, பாடசாலையிலே, வெளியிடங்களிலே, குடும்பங்களிலே, உறவுகள் நண்பர்கள் மத்திலே, ஏன் சில சபைகளிலே கூட, நியாயம் செய்வதிலே வேறுபட்ட அளவுகோல்களை பயன்படுத்திவிட்டு, அதற்கு விளக்கங்கள் கூறிகொள்கின்றார்கள். இரக்கம் காண்பிப்பது நல்லது. ஆனால், அது சமநிலையானதும், நியாயத்தை புரட்டுகின்றதாகவும் காணப்பட முடியாது. முதலாவதாக, பொதுக் கணக்கிலே மற்றவனுக்கு இரக்கம் காண்பிக்க முன்பு, உன்னுடைய கணக்கிலே மற்றவனுக்கு இரக்கம் செய்ய பழகிக் கொள்ள வேண்டும். பிரியமானவர்களே, நாம் ஆராதிக்கும் தேவன், பட்சபாதமுள்ளவர் அல்ல. எனவே நாம் எந்த அளவினால் மற்றவர்களை அளக்கின்றோம் என்பதைக் குறித்து எச்சரிக்கையுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

**லேவியராகமம் 19:15**

சிறியவனுக்கு முகதாட்சிணியம் செய்யாமலும், பெரியவனுடைய முகத்துக்கு அஞ்சாமலும், நீதியாகப் பிறனுக்கு நியாயந்தீர்ப்பாயாக.

**ஜெபம்:** நீதியின் தேவனே, உம்முடைய வழிகள் செம்மையானவைகள். நான் ஒரு போதும் நியாயத்தை புரட்டாதபடிக்கும், உம்முடைய வார்த்தைகயை விட்டு விலகாதபடிக்கும் உணர்வுள்ள இருதயத்தை தந்து நடத்துவீராக.. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.